DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team 416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker — Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN 416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1267 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 17, 2020



## உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 13,378,897 ஆக உயர்ந்தது...

### உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 581,081 ஆக அதிகரித்துள்ளது...

### இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லையாம்...

### அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு ஒன்றரை இலட்சத்தைத் தாண்டியது.

## எனது வெற்றியைக் கேட்டு மகிழ்ச்சியடைவதை விட சம்பந்தன், சுமந்திரனின் தோல்விச் செய்தி வருகையில் நான் மகிழ்ச்சியடைவேன் என்கிறார் சிவாஜிலிங்கம்



இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் என்னுடைய வெற்றிச் செய்தி கேட்டு நான் சந்தோசமடைவதனை விட சம்பந்தன் ஐயா மற்றும் சுமந்திரனின் தோல்விச் செய்தி கேட்டால் அதுவே எனக்கு வெற்றிச் செய்தியாக அமையும். ஆதன் மூலம் தமிழினத்திற்கு ஓர் மாற்றம் ஏற்படும் என்றார் சிவாஜிலிங்கம். நண்பன் இணையத்தளம், மற்றும் கனடா உதயன் பத்திரிகை, மற்றும் இணையத்தளத்துக்கு பிரத்தியேகமாக யாழ்ப்பாணத்தில் அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

"சில காலத்திற்கு முன்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வரும் போது அவரது நண்பர்கள் நிழல் பிரதமர் வருகிறார் எனக் கூறியிருந்தனராம். அதனைக் கேட்ட சுமந்திரன் "இல்லை, இல்லை நான் தான் நிஜப் பிரதமர், ரணில் விக்ரமசிங்கே தான் நிழல் பிரதமர்'' எனப் பதில் கூறினாராம். இவ்வாறு நிழல் பிரதமரை வைத்து நிஜப் பிரதமராக இருந்து எதைச் சாதித்தீர்கள்? நூறு அரசியல் கைதிகளை விடுதலை செய்தீர்களா? மக்களின் காணிகளை விடுவித்தீர்களா?, போரினால் அழிந்து போன தேசத்தை மீளக் கட்டியெழுப்ப முயற்சி எடுத்தீர்களா? அண்மையில் இராணுவ ஆட்சி வரப்போகிறது என்று சுமந்திரன் புதிய நகைச்சுவை ஒன்றைக் கூறி இருந்தார். இம்முறை திருகோணமலையில் சம்பந்தன் ஐயா தோற்கடிக்கப்படக் கூடிய சூழ்நிலை நிலவுகிறது. அவருக்கு அனுதாபம் காட்ட மக்கள் இம்முறை தயாரில்லை. *(யாழ்ப்பாணத்திலிருந்து செய்தியாளர் டிசாந்தன்)*

## கனடாவின் சிறு கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைச்சர் Mary Ng, மார்க்கம் நகரில் PCL Graphics நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்



கனடாவின் மத்திய அரசின் சிறு கைத்தொழில்" ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய அமைச்சுக்களுக்கான அமைச்சர் மேரி இங் அவர்கள் மார்க்கம் நகரத்தில் அமைந்துள்ள ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில் நிறுவனத்திற்குநேற்று வியாழக்கிழமையன்று உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டார். PCL Graphics என்னும் பெயர் கொண்ட இந்த நிறுவனம் கோவிட்-19 நோயின் தாக்கத்திற்கு முன்பாக அதிக தொழில் நுட்பம் கொண்ட அச்சுத் தொழில் மற்றும் அழகிய விளம்பர தொகுப்புக்கள் வடிவமைப்பு ஆகியவற்றில் முதன்மையான ஒரு நிறுவனமாக விளங்கியது.

*(தொடர்ச்சி பின் பக்கம்)*

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

ANUJA KUMARASAMY 647-267-7482
RE/MAX Realtron

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel 416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
Property Max Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.64% | | $1,553.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,553.00 |



mortgageSolutions.ca

Kiruba Thanabalasingham
Mortgage Agent Lic#M12002440

Cell: 416.894.9122
Fax: 647.317.1511

info@mortgageSolutions.ca
Ultimate Mortgage Group. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

## 416.894.9122

## $375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,



Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



## HAIR SALON FOR SALE

**Brimley / Eglinton**

Sale: - Equipment
- Tools
- Supplies
- Client List

21+Years in business.
650+ Regular Clients, Plus Walk-Ins

**Call: (416) 768-8673**
**Email: Kumari_Madu@hotmail.com**

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: (416) 894-6244**


## உதயன் கதிரோட்டம்

# தமிழர்களுக்கு எதிராக மிகவும் மூர்க்கத்தனமாகக் கிளர்ந்து எழுந்துள்ள இலங்கை அரசும், புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கும் சிங்கள அமைப்புக்களும்...

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக சுமார் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள பெரும்பான்மை இனத்தின் அரசியல்வாதிகளாலும் இனவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல், பொருளாதார, சமூக, சமயம், மொழி ஆகியவை சார்ந்த நடவடிக்கைகளும் அவற்றால் ஈழத் தமிழினம் அனுபவித்த விபரிக்க முடியாத கொடுமைகளும் எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாது.

இவ்வாறான எதிர்ப்புணர்வும் கொடூர சிந்தனைகளும் தோன்றுவதற்கு பல காரணங்கள் உள்ளன என்பதை உலகமே நன்கு அறியும். ஆனால் இலங்கை அரசினால் தொடர்ச்சியாக எமது இனம் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் துயர்படிந்த வாழ்வை தொடர்வதை கண்டு சகித்துக் கொள்ள முடியாத இளைஞர் அரசியல் சிந்தனைகளையும் தம்மோடு இணைத்துக் கொண்டு ஆயுதம் ஏந்திய போராட்டத்தை ஆரம்பித்தனர்.

எனினும் சமாந்தரமாகவே ஆயுதப்போராட்டத்தையும் பாராளுமன்றம் மூலமான வாக்குப் பலத்தைக் கொண்ட கருத்து ரீதியான போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த எமக்கு இரண்டு வகையான போராட்டங்களிலும் சர்வதேசத்தின் ஆதரவு முழுமையாகக் கிட்டவில்லை. எட்டவே நின்று கொண்டு பல நாடுகள் எம் இனத்தின் பிரதிநிதிகளுக்கு வாக்குறுதிகளைத் தந்தாலும் இறுதியில் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு சர்வதேசம் போட்டியிட்டுக் கொண்டு அந்த மண்ணிற்கு இராணு உதவிகளை அனுப்பி எமது மக்களையும் போராளிகளையும் கொன்று குவித்தன.்.

இன்னொரு பக்கத்தில் பாராளுமன்றம் என்னும் மேடையைப் பாவித்து கருத்துப் போராட்டத்தை நடத்துவதற்காக எமது மக்கள் வாக்களித்து அனுப்பி வைத்த எமது பிரதிநிதிகள் கூட தங்கள் கடமையை செய்யாமல் "தங்கள்" திருப்திக்கு ஏற்றவாறு பாராளுமன்றக் கதிரைகளைப் பயன்படுத்தினரே தவிர , எம் இனத்தின் தேவைகளைபெற்றுத் தரவில்லை. மாறாக அவர்கள் பெற்றது ஏராளம்!, ஏராளம்.

இவ்வாறாக நாம் கடந்து வந்த எமது அரசியல் தளம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேறு வடிவங்களை எடுத்து எமது இனத்திற்கு எதிராக பெரும்பான்மை இனம் சார்ந்த தலைமைகள் மிகவும் மூர்க்கத்தனமாகக் கிளர்ந்து எழுந்து நின்று "சங்காரம்" செய்வது போன்று, அச்சமூட்டும் வகையில் தங்கள் நடவடிக்கைகளைத் ஆரம்பித்துள்ளன. நாம் அவதானித்த வகையில் இலங்கை அரசும், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் சிங்கள அமைப்புக்களும் இவ்வாறான மூர்கத்தனமான முறையில் நீதிக்கு முரணான வகையில் தங்கள் காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் ஜனாதிபதியாக கோத்தபாய தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவர் எங்கிருந்து அரசியலுக்கு வந்தாரோ, அதே இராணுவ வழியில் ஆட்சியை நடத்த முற்படுகின்றார்.இவற்றின் உச்சமாக "ஜனாதிபதி செயலணி" என்னும் இராணுவத்தின் சாயம் பூசப்பட்ட அரச செயற்பாட்டை ஆரம்பித்து தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை முன்னாள் இராணுவ அதிகாரிகளையும் பௌத்த பிக்குகளையும் கொண்டு மேற்கொண்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதே வெளிநாடுகளில் குறிப்பாக இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் தமிழர்களுக்கு எதிரான அமைப்புக்களை இலங்கை அரசின் ஆதரவோடு நிறுவி, அவற்றை தமிழ் மக்களின் முன்னேற்றமான எண்ணங்களைச் சிதைக்கும் வகையில் செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக கனடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "இலங்கை- கனடிய செயல் கூட்டணி" என்னும் அமைப்பின் ஊடாக இங்கு குழப்ப நிலையைத் தோற்றுவிக்க இங்கு வாழும் சிங்கள இனமக்களை அணி திரளச் செய்து மாகாண மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் தமிழ் மக்களுக்கு உள்ள செல்வாக்கை சரியச் செய்யும் கபடத்தனமான செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

ஆனால் இவற்றையெலலாம் கவனிக்காத அல்லது அக்கறை கொள்ளாத வகையில் தமிழர் அமைப்புக்கள் வாளாதிருப்பது என்பதும் எமக்கு கவலையளிக்கின்றது

நாம் மேற்குறிப்பிட்ட இலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை மக்களை பிரதிநிதிததுவம் செய்கின்றோம் என்ற போர்வையில் இயங்கும் "இலங்கை- கனடிய செயல் கூட்டணி" அமைப்பு கடந்த சில மாதங்களாக தமிழ் மக்களுக்கும் கனடாவில் தேர்ந்தெடுக்கப்பட்டதமிழ் பேசும் "மக்கள் பிரதிநிதி" களுக்கும் இடையூறு செய்யும் வகையில் கலந்துரையாடல்களையும் இணையவழி கூட்டங்களையும் நடத்திவருகின்றது.

எனவே அந்த அமைப்பு எமது மக்களுக்கு எதிராக நடத்துகின்ற செயற்பாடுகள் பற்றிய கவனயீர்ப்பை ஏற்படுத்தும் வகையில் கனடாவில் இயங்கும் "ஈழத்தின் குரல் என்னும் அமைப்பு இன்று 17ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கனடிய நேரப்படி 7.00 மணிக்கு இணைய வழி மூலமாக கலந்துரையாடலை நடத்துகின்றது. எனவே எமது மக்களின் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் கலந்து கொள்ளும் படி நாம் வேண்டுகின்றோம். இதில் கலந்து கொள்வதற்கு Zoom Meeting ID : 8501015 9827 - Password:- 015769 ஆகியவற்றைக் குறித்துக்கொள்ளும்படியும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.


## தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை

ஸ்காபுறோ நகரில

**Bellamy / Progress**

சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள Doors & Windows தொழிற்சாலைக்கு மர வேலை மற்றும் Spray Paint செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

**Call: (416) 875-4119**

## BASEMENT FOR RENT

**Morningside / McNicoll**

சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 1 bedroom with separate entrance உள்ள basement உடனடியாக வாடகைக்கு உண்டு. Laundry வசதியும் உண்டு அத்துடன் அருகில் TTC, school, & park ஆகியன உண்டு. சிறிய குடும்பம் அல்லது தனிநபர் விரும்பத்தக்கது.

**Call: (647) 852-5360**

## முடி வெட்டுனர் தேவை (HAIR CUTTERS)

ஸ்காபுறோவில் அமைந்துள்ள பிரபல சலூன் ஒன்றுக்கு உடனடியாக ஆண், பெண் முடிவெட்டுனாகள் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**Call: (647) 470-4615**

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் அமைக்கலாம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**Call: (416) 299-6742**


# சமூகத்தின் பார்வையில் மாண்புறு மங்கையாக பரிணமிக்கும் வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கம்




சமூகத்தின் பார்வையில் மாண்புறு மங்கையாக பரிணமிக்கும் பவதாரணி ராஜசிங்கம், தனது ஆரம்ப காலம் முதலே தான் பிறந்த மண்ணில் தான் காணும் அவலங்களையும், தன் சொந்த மக்கள் பிரச்சினைகளையும் கலைந்து தன்னிறைவான சமூகம் ஒன்றை உருவாக்கும் கனவை தனக்குள் சுமந்து வந்திருக்கிறார். அக்கனவு இப்போது, அவரது அரசியல் பிரவேசம் மூலமாக புதிய பரிமாணத்தை அடைந்திருக்கிறது.

சமூக விடயங்களில் இதுவரை தனியொரு பிரஜையாக தன்னால் இயன்றவரைக்கும் செயற்பட்டதைப் போல, இனிவரும் காலங்களில் யாழ் மற்றும் கிளிநொச்சி மக்களின் அனுமதியுடன், அவர்கள் தேர்ந்தெடுக்கும் சரியான முடிவுகளுடன் பாராளுமன்ற உறுப்பினராக கடமையேற்று வடக்கு மாகாணத்தை கட்டியெழுப்புவதே கண்களைத்திறந்துகொண்டு அவர் காணும் கனவாகும்.


**NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!**

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

## இலங்கை செய்திகள்

# மன்னாரில் சட்ட விரோதமான அரச காணி அபகரிப்பு தடுத்து நிறுதத‌ம்



நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட இராச மடுக் கிராமத்தில் தனியார் ஒருவரால் அரச காணி, கோவில் காணி, இந்தியாவில் உள்ள பொது மக்களின் காணிகள் என சுமார் 49 ஏக்கர் காணிகளை துப்பரவு செய்து வேலிய-'டும் நடவடிக்கையில் நேற்று முன் தினத்திலிருந்து ஈடுபட்டு வந்துள்ளார்.

குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நானாட்டான் சிறி செல்வ முத்து மாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரும், பொது மக்களும் இணைந்து மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்தனர்.

குறித்த முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் உதவித்தேர்தல் ஆணையாளர் ஜெ. ஜெனிற்றன் அவர்களின் பணிப்பில் மன்னார் தேர்தல் முறைப்பாட்டுக்குழு அதிகாரி ஏ. டி. பி. றொகான் தலைமையிலான குழுவினர் பொலிசாருடன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன் போது தேர்தல் காலத்தில் முரண்பாடுகளை தவிர்துக் கொள்வதற்காக அரச, கோவில் காணிகளை வேலியிடும் செயற்பாடுகளுக்கு தடைவிதித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் தேர்தல் வேட்பாளர் ஒருவர் மாரடைப்பால் மரணம்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேட்பாளர் ஒருவர் இன்று மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் அகஸ்தீன் மக்டொனால்ட் (வயது - 58) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இன்று காலை, தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த நிலையிலேயே, அவரது வீட்டில் வைத்து, மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

முன்னதாக நேற்று ஊர்காவற்றுறையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் கனகசுந்தரம் ஜெயக்குமார், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவுத் தெரிவித்து, பரப்புரையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, மயங்கி விழுந்து மரணமானார்.

# இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரமும் இனிமேல் இராணுவத்திடமாம்!



இலங்கையில் இனிமேல் சாரதி அனுமதிப்பத்திரங்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என அரச தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன மற்றும் இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருடன் நடந்த கலந்துரையாடலின்போது, இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாக போக்குவரத்து துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.


அதற்கமைய எதிர்வரும் வருடம் முதல் இந்த நடவடிக்கை இராணுவத்தினரிடம் ஒப்படைப்படவுள்ளது.

வாகனச்சாரதி அனுமதிப்பத்திரத்தை தயாரித்து வழங்கும் நடவடிக்கையை தனியார் நிறுவனத்திடம் வழங்கியுள்ளதால் பெரும் தொகையை செலுத்தப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தணிக்கை அறிக்கையின்படி, 2009 முதல் 2017 வரையிலான காலகட்டத்தில் அந்த தனியார் நிறுவனத்திற்கு ரூ.7,467.65 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் ஒப்பந்தம் காலாவதியான பிறகு, மார்ச் 2016 முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் மேலும் ரூ.1,856.65 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மிகக்குறைந்த செலவில் வாகனசாரதி அனுமதிப்பத்திரத்தினை இராணுவத்தினால் தயாரிக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

# யாழ்.கொழும்புத்துறையில் இரும்புப் பெட்டிக்குள் 17 கைக்குண்டுகள் மீட்பு!



கொழும்புத்துறையில் வீடொன்றை சுத்தம் செய்த போது 17 கைக்குண்டுகள் அடங்கிய இரும்புப் பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து நீதிமன்றின் உத்தரவில் அத்தனை கைக்குண்டுகளும் சிறப்பு அதிரடிப் படையினரால் செயலிழக்கம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் நேற்று வியாழக்கிழமை காலை வீடொன்றை சுத்தம் செய்த போது, அந்த வீட்டு வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் பெட்டி ஒன்று கண்டறியப்பட்டது. அதற்குள் வெடிபொருள்கள் இருப்பதை அவதானித்த வீட்டில் உள்ளவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர். அதனை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் அனுமதியை பொலிஸார் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிலையில் நீதிமன்றின் அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் இன்று மாலை பெட்டியை அங்கிருந்து அகற்றியதுடன் அதற்குள்ளிருந்த 17 கைக்குண்டுகளும் செயலிழக்கம் செய்யப்பட்டன.

# நல்லூர் திருவிழாவில் 300 பக்தர்களையேனும் அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை



நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவில் 300 பக்தர்களையேனும் ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

வழக்கமாக பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கேற்கும் இந்தத் திருவிழாவில், கொரோனா அச்சம் காரணமாக இந்த முறை அதிகம் பேர் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, ஆலய ஊழியர்கள், இந்துக் குருமாருடன் திருவிழாவை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவில் 300 பக்தர்களையேனும் ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ். மாநகர பதில் முதல்வர் து. ஈசன் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நயினாதீவு, மடு தேவாலய திருவிழாக்களில் அதிகபட்சம் 300 பக்தர்களை பங்கேற்க அனுமதிக்கப்பட்டது அதற்கமைய நல்லூர் ஆலய வளாகத்திலும் 300 பக்தர்களையேனும் பங்கேற்க அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையில் கொரோனா தொடர்பாக போலியான தகவல்களை பரபுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை



கொரேனா தொடர்பில் போலியான தகவல்களை சமூகத்தில் பரப்பும் தரப்பினரை கண்டறியுமாறு அரசாங்கம் பாதுகாப்பு பிரிவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அரசாங்க தகவல் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

மக்களை தேவையற்ற குழப்பங்களுக்கு உட்படுத்தும் வகையிலும் ஏமாற்றும் வகையிலும் போலித் தகவல்கள் பரப்பபடுவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கம் விடுமுறை தினத்தை அறிவிக்க மற்றும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக போலித் தகவல்கள் பரப்பபட்டு வருகின்றன. எனினும், இதுவரை அவ்வாறான எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்தநிலையில் போலியான தகவல்களுக்கு ஏமாறாது சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பாதுகாப்பாக செயற்படுமாறு அரசாங்கம் பொதுமக்களை கோரியுள்ளது.

# ஊர்காவற்றுறையில்தேர்தல் பிரசாரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு தமிழரசுக் உறுப்பினர் மரணம்!



ஊர்காவற்றுறை பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் அரசு கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த நாடகக் கலைஞரான காவலூர் செல்வம் என்று அறியப்படும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் கனகசுந்தரம் ஜெயக்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியினர் ஊர்காவற்றுறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடுவீடாக பிரச்சார பணியில் ஈடுபட்டனர். இதன்போது பிரதேச சபை உறுப்பினர் ஜெயக்குமாருக்கு திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டு, உடனடியாக ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

இவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# இலங்கையின் மூத்த பெண் எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் காலமானார்





ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கிய மூத்த பெண் எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் காலமானார்.

இவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கொழும்பில் காலமாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்மா சோமகாந்தன், பெண்கள் தொடர்பாக தொடர்ச்சியாக குரல் எழுப்பி வந்ததுடன் எழுத்து ஆளுமையாலும் பல விடயங்களை சமூகத்திற்கு எடுத்துரைந்த எழுத்தாளர் ஆவார்.

மறைந்த எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் அவர்களையும் அவரது கணவர் திரு நா. சோமகாந்தன் அவர்களையும் தம்பதியாக 2004ம் ஆண்டு நடைபெற்ற உதயன் 2004 பல்சுவைக் கலை விழாவிற்கு கனடாவிற்கு அழைத்திருந்தோம். இருவருக்கும் மேடையில் சிறந்த கௌரவம் வழங்கபெற்றது. கனடிய பிரதமர் அவர்களின் பாராட்டுப் பத்திரமும் அவர்கள் இருவருக்கும் வழங்கப்பெற்றது. இன்னும் விசேடம் என்னவென்றால், அந்த வருடத்து பல்சுவைக் கலைவிழாவிற்கு 'ஆச்சி' மனோரமா அவர்களும் அவரது புதல்வர் பூபதியும் சிறப்புக் கலைஞர்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த மேடையில் 'ஆச்சி' மனோரமா அவர்களின் பாராட்டுக்களையும் மனமுவந்து பெற்றுக்கொண்ட அமரர் நா. சோமகாந்தன் அவர்களும் அமரத்துவமாது பத்மா சோமகாந்தன் அவர்ளும் மிகுந்த மகிழ்ச்சியுடன் "ஆச்சி' அவர்களின் கைகளைப் பற்றிக்கொண்டமை இன்னும் எமது கண்களின் முன்னே காட்சியளிக்கின்றது.- ஆர். என். லோகேந்திரலிங்கம்- பிரதம ஆசிரியர் , கனடா உதயன்.

எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் அவர்களின் மறைவு குறித்து 'ஞானம்' சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமான ஞானசேகரன் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------------------------------------

*திருமதி பத்மா சோமகாந்தன் எமது உறவினர். அவர் அமரத்துவம் அடைந்த அன்று காலையும் அரைமணிநேரம் அவருடன் தொலைபேசியில் கதைத்தேன். அவரது பிரவு எமக்குப் பெரிதும் அதிர்ச்சியைத்தருகிறது. அவர் சிரேஷ்ட தராதர வகுப்பில் படிக்கும்போது எஸ்.டி. சிவநாயகத்தை ஆசிரியராகக்கொண்ட சுதந்திரன் பத்திரிகை 1951இல் ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது. இதுவே இலங்கையின் முதலாவது சிறுகதைப் போட்டியாகக் கருதப்படுகிறது. அந்தப்போட்டிக்கு இவர் 'இரத்தபாசம்' என்ற கதையை அனுப்பிவைத்தார். அக்கதை முதற்பரிசினைப் பெற்றுக் கொண்டது. அந்தப் போட்டியில் இவர் 'புதுமைப்பிரியை' என்ற புனைபெயரில் பங்குபற்றியிருந்தார். பரிசுபெற்ற முதற்சிறு கதைமூலம் படைப்பு இலக்கிய உலகில் பிவேசித்தவர் பத்மா. இந்தப்போட்டியில் டானியல் இரண்டாம் பரிசினையும் டொமினிக் ஜீவா மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.*

*கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள், புதிய வார்ப்புகள், கரும்பலகைக்காப்பியங்கள், இற்றைத்திங்கள் முதலான சிறுகதைத்தொகுப்புகளை வரவாக்கியிருக்கும் இவர், இந்நூல்களுக்காக தமிழ் நாடு லில்லி தேவசிகாமணி பரிசு, சென்னை இந்து நாளிதழின் பாராட்டு, சார்க் மகளிர் சங்கத்தின் பரிசு, வடக்கு – கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய பரிசு பெற்றிருப்பவர்.*

*இவைதவிர 'ஈழத்து மாண்புறு மகளிர' பற்றிய நூலை 2002இல் எழுதி வெளியிட்டுள்ளார். ஈழத்து தமிழ்ப்பெண் ஆளுமைகள் என்ற நூலையும் வரவாக்கியிருக்கிறார். சிறுவர் இலக்கியமும் படைத்திருக்கும் பத்மா, சிறுவர்களுக்காக 'அனுமான் கதை' என்ற நூலையும் தந்திருக்கிறார். உலகப் புகழ்பெற்ற சுவாமி சின்மயானந்தரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். திருமதி பத்மா ஒரு பெண்ணியச் சிந்தனையாளர் பெண்ணின் குரல் சஞ்சிகைக்கு ஆசிரியராகப்பணிபுரிந்துள்ளார். ஊடகத்துறையில் கடமையாற்றும் பெண்களின் ஆளுமையை வலுப்படுத்தவும் அவர்களின் நன்மைகளைக் கவனிப்பதற்குமாக இயங்கிய 'ஊடறு' என்ற அமைக்குத் தலைமைதாங்கி சிலகாலம் வழிநடத்தியுள்ளார்.*

*திருமதி பத்மா ஆங்கிலத்திலும் எழுதும் திறன்வாய்ந்தவர். உலகெங்கும் பரவிவாழும் தமிழ் மக்களின் பிள்ளைகள் தமிழ் மொழியை வாசிக்கத் தெரியாமல் இருக்கிறார்கள் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டையும் சமய நெறிகளையுமாவது தெரிந்திருக்கவேண்டும் எனக்கருதி அவர்களுக்காக Stories from Hindu Mythology என்ற நூலை எழுதியிருக்கிறார்.*


MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000

Mississauga / Brampton: 416-650-5400





Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced
Credit Counsellor



# ப்ராம்ப்ட்டனில் அதிவேகமாக வாகனம் ஓட்டுவதை முற்றிலும் சகிக்க இயலாது

## ப்ரம்ப்டன் நகர மேயரின் கடுமையான அறிவிப்பு

ஜூலை 8 ஆம் தேதி நகர்மன்றமானது, தானியங்கு வேகக் கட்டுப்பாட்டு அமல்படுத்தலை [Automated Speed Enforcement (ASE)] நடைமுறைப்படுத்த ஏகமனதாக ஒப்புதல் அளித்தது இது அதிவிரைவாக செல்லுதல், மற்றும் போக்குவரத்து தொடர்பான விபத்து சம்பவங்களைக் குறைப்பதற்காகவும், ப்ராம்ப்ட்டன் நகரின் சாலைப் பயன்பாட்டாளர்கள் அனைவருக்குமான பாதுகாப்பை மேம்படுத்தவும், ஆண்டுதோறும் 200 அமைவிடங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

தற்சமயம், இந்த ASE அறிவிப்புக் குறிகள் ஐந்து இடங்களில் உள்ளன் அவற்றில் செப்டம்பர் 2020 வாக்கில் கேமிராக்கள் பொருத்தப்படும்.:

வார்டு1: வோட்டன் ஸ்ட்ரீட் கிழக்கு (கென்னடி ரோட் மற்றும் சென்டர் ஸ்ட்ரீட்க்கு இடையில்)
வார்டு2: ரிச்வேல் ட்ரைவ் நார்த் (கென்னடி ரோட் மற்றும் சாண்டல்வுட் பார்க்வேக்கு இடையில்)
வார்டு3: ரே லாஸன் புலிவார்டு (ஹுரொன்டோரியோ ஸ்ட்ரீட் மற்றும் மெக்லாலின் ரோட்க்கு இடையில்)
வார்டு8: அவொண்டேல் புலிவார்டு (ப்ரமீலியா ரோட் மற்றும் பிர்ச்பேங்க் சாலைக்கு இடையில்)
வார்டு9: ஃபெர்ன்ஃபாரஸ்ட் ட்ரைவ் (பொவையர்ட் ட்ரைவ் மற்றும் சாண்டல்வுட் பார்க்வேக்கு இடையில்)

நகர நிர்வாகமானது, 25 சமுதாய பாதுகாப்பு மண்டலங்களை செப்டம்பர் 2020 வாக்கில் அமைக்கவிருக்கிறது. நகரின் ஊடாக யுளுநு க்கு ஆதரவாக இருக்கும் வகையில், பணியாளர்கள் கூடுதல் கேமிராக்களை கொள்முதல் செய்யத் துவங்குவார்கள். இந்தக் கொள்முதலானது, இந்த வருட இறுதியில்பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ப்ராம்ப்ட்டன் நகர மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்கள் இதுபற்றி பின்வருமாறு கூறுகின்றார்:**

"ப்ராம்ப்ட்டனில் அதிவேகமாக வாகனம் ஓட்டுவதை முற்றிலும் சகிக்க இயலாது இந்தச்செய்தியை தெளிவாக எடுத்துச் சொல்வதற்காக, நமது நகரமன்றம் தொடர்ந்து நடவடிக்கைஎடுக்கும். நமது நகரம் முழுவதிலுமாக 200 இடங்களில் தானியங்கிவேகக் கட்டுப்பாட்டை அமலாக்கம் செய்வதை அதிகரிப்பதுபோன்ற நடவடிக்கைகளின்மூலம், வாகன விபத்து சம்பவங்களை குறைப்பதற்கும், அனைத்து சாலை பயனாளிகளுக்கும், குறிப்பாக அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கான பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் நாங்கள் பணியாற்றிவருகிறோம்."

# அத்திவரதர் வைபவம் - ஒரு சமூக ஊடக நிகழ்வு?

### வெ.பாலகிருஷ்ணன் ஐபிஎஸ்--துணை ஆணையர் சென்னைப் பெருநகர காவல்துறை (வடக்கு மண்டலம்)

கடந்த ஆண்டு இந்தியா முழுவதும் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு நிகழ்வு காஞ்சிபுரத்தில் இடம்பெற்ற அத்திவரதர் தரிசனம். ஜூலை 1 ஆம் தேதி தொடங்கிய அந்த தரிசன வைபவம் 48 நாட்களுக்கு இடம்பெற்றது. "அத்திவரதர் வைபவம" சமூக ஊடகப் பரபரப்பின் வெளிப்பாடே என்று கூற முடியும்.

உள்ளூர் முதல் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் தரிசனம் செய்த இந்த வைபவம் பல்வகையான சிக்கலான காரணிகளால் தூண்டப்பட்டது. ஆலய நகரமான காஞ்சிபுரம் இதைத் தாக்குபிடிக்க ஆரம்பத்தில் திணறியது, ஆனால் அதன் பன்முகத்தன்மைக்கு ஏற்ப அந்நகரம் இந்த வைபவத்தைச் சிறப்பாக நடத்தி பெருமை கொண்டது.

இந்தப் பரபரப்பு ஆரம்பத்தில் மந்தமாகவே இருந்தது. ஆனால் அடுத்த சில தினங்களில் எதிர்ப்பார்ப்புகளை மீறி "தரிசனம்" செய்ய வந்தோரின் எண்ணிக்கை காட்டுத் தீ போல அதிகரித்தது. படங்கள், காணொளிகள் சமூக ஊடகங்களில் வெகுவாரியாக வலம் வந்தன. காஞ்சி மாநகர் மனித அலைகளால் உருவான சுனாமியை எதிர்கொண்டது.



கேலிச் சித்திரங்கள் மற்றும் நையாண்டிப் படங்களை வரைவோர் ஒரு மாதத்துக்கும் மேலான காலப்பகுதியில் மிகவும் மும்முரமாக இருந்தனர். சிலர் "அத்திவரதர்" குளத்திலிருந்து வெளிவந்ததை "தசாவதாரம்" திரைப்படத்தில் சுனாமி அலைகளால் விஷ்னு சிலை ஒன்று கரையொதுங்கும் காட்சியுடன் ஒப்பிட்டனர்.

வைஷ்ணவ அறிஞர்களும் மடாதிபதிகளும் கூட பல்லவ சாம்ராஜ்ஜியத்தின் தலைநகராக இருந்த காஞ்சியில் குவிந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். இந்த ஹவைபவம்ஹ சிறப்பு வாய்ந்த மத நிகழ்வா அல்லது அதிமுக்கியம் வாய்ந்த சமூக நிகழ்வா என்பதில் மாறுபட்டனர்.

எனது பார்வையில், இந்த நிகழ்வை சமூக, உளவியல், பொருளாதார மற்றும் நிர்வாக மேலாண்மை போன்ற பல கோணங்களில் புரிந்துகொள்ள தீவிர ஆய்வு உறுதியாகத் தேவை. அது எதிர்காலத்தில் இப்படியான நிகழ்வுகளை மேலும் சிறப்பாகக் கையாள உதவும் என்று நம்புகிறேன்.

இதில் அடிப்படைக் கேள்வி ஹஅத்திவரதர் வைபவம்ஹ குறித்து மக்கள் இந்த அளவுக்கு பரபரப்படைய ஊக்குவித்தது எது? என்பதே! உலகெங்கிலிருந்தும் "பெருமாளைக்" காண மக்கள் வந்தனர். காஞ்சி நகரின் பொருளாதாரம் "வரதர் எழுந்தருளிய" ஏழு வாரக் காலப்பகுதியில் ஏற்றம் கண்டது. நகரத்திலிருந்தோர் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இத்திருவிழாவுடன் ஈடுபட்டனர். அறிந்தோர் அறியாதோர் என வந்தோர் அனைவருக்கும் அடைக்கலம் அளித்து தமது பொருளாதாரத்தையும் சிறிது மேம்படுத்திக் கொண்டனர்.



"வாழ்க்கையில் ஒரேமுறை" என்று வர்ணிக்கப்பட்ட இச்சம்பவத்தின் நிறைவுப் பகுதியில் பத்து நாட்கள் அங்கு நடைபெற்றதை பாதுகாப்புப் பணியில் இருந்த போது நேரில் கண்டேன். இந்த நிகழ்வை பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் கும்பமேளாவுடன் சுலபமாக ஒப்பிடலாம். ஆனால் ஒப்பீட்டளவில் காஞ்சி நகரில் குவிந்த மனிதக் கூட்டம் கும்பமேளாவைக் காட்டிலும் அதிகம்.

இந்த "வைபவத்தை" நான் 2017ல் நடந்த "ஜல்லிக்கட்டு போராட்டத்துடனும்" ஒப்பிட விழைகிறேன். சென்னை மெரீனா கடற்கரையில் அந்தப் போராட்டம் நடைபெற்ற போது, மைலாப்பூர் பகுதியின் துணை ஆணையராக இருந்த நான், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதில் முன்னின்று செயல்பட்டேன். இந்த இரு சம்பவங்களுக்கும் இடையே இருந்த ஒரு மிகப்பெரிய ஒற்றுமை, சமூக ஊடகங்கள் மூலம் ஆட்களை கவர்ந்திழுத்ததாகும். எனது நினைவில் நிற்கும் மற்றொரு சம்பவம் "மேமருத்தூர் நிகழ்வாகும்". வேப்ப மரத்திலிருந்து பால் வழிகிறது எனும் தகவல் காட்டுத் தீயாகப் பரவ ஏராளமானோர் அந்தச் சிறு நகரில் குவிந்தனர்.

இவை அனைத்திலும் இருந்த ஒரு ஒற்றுமை-அவை உண்மையோ இல்லையோ - அவை வேகமாப் பரவி பரபரப்பை ஏற்படுத்துவதே. டிஜிட்டல் உலகில் செய்திக்கான முக்கியத் தளமாக விளங்குபவை சமூக ஊடகங்கள். அவ்வகையில் காஞ்சியில் நிறைவடைந்த வைபவம் எதிர்காலத்தில் ஆய்வாளர்களால் மேற்கோள் காட்டப்படும் என்பதில் ஐயமில்லை.

ஃபேஸ்புக்கில் நேரடி ஒளிபரப்பு, அன்றாடம் யூட்யூபில் காணொளிகள், இன்ஸ்டாகிராமில் லட்சக்கணக்கான புகைப்படங்கள், மெய்யா-பொய்யா என்பதைக் கூட ஆராய நேரமின்றியோ சிந்தனையின்றியோ வாட்ஸப்பில் உலவிய செய்திகளும் அதைத் தொடர்ந்த விவாதங்களும் "அத்திவரதர் வைபவத்துக்கு" கூடுதல் ஆதரவைப் பெற்றன. ஆழமான மதநம்பிக்கை இல்லாதவர்கள் கூட இந்நிகழ்வை வைத்து தம்மை முன்னிறுத்திக் கொண்டனர்.

ஒரு திருவுருவச் சிலையை இதுவரை இல்லாத வகையில், பக்தர்கள் வந்து தரிசித்த இந்த நிகழ்வு மாபெரும் வெற்றியடைய சமூக ஊடகங்கள் உட்பட என்ன காரணிகள் காரணமாக இருந்தன என்பதை ஆராய பகுதியளவில் தரவுசார் முறையில் கேள்வி பதில் அடிப்படையில் ஆய்வொன்றை நான் மேற்கொண்டேன்.

சில வைஷ்ணவப் பெரியோர்கள் அந்தத் திருவுருவச் சிலையின் ஒரு பகுதி சேதமடைந்திருப்பதால் அது வழிபாட்டுக்கு உகந்தது அல்ல என்பதாலேயே நீருக்கு அடியில் அது வைக்கப்பட்டிருந்தது என்றும் அப்போது கூறினர்.

சமூக ஊடகப் புரட்சிக்கு அப்பாற்பட்டு தனிநபர்களிடம், நாற்பது ஆண்டுகளுக்கு பிறகு அந்தத் திருவுருவச் சிலை மீண்டும் நீரிலிருந்து வெளியே தரிசனத்துக்காகக் கொண்டுவரப்படும் போது அதைக் காண "நாம் இருப்போமா" எனும் அச்சமும் பாதுகாப்பற்ற உணர்வும் காணப்பட்டது. சிறப்பான காட்சிகளையும் புகைப்படங்களையும் பெறுவதிலும், அந்த வைபவத்தைச் சார்ந்த செய்திகளை வெளியிடுவதிலும் ஊடகங்களிடையே இருந்த அதீத போட்டியையும் என்னால் காண முடிந்தது.



எனது கேள்விகளுக்கு பதிலளித்த பெரும்பாலானோர், தமது நன்பர்களும் உறவினர்களும் "ஏற்கனவே தரிசனம் செய்துவிட்டனர்" என்பதால் அவ்வாறு செய்ய "தாங்களும் அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளதாகத்" தெரிவித்தனர். மூத்த குடிமக்களோ இதுவே தமக்கான கடைசி வாய்ப்பு என்றும் தரிசனத்துக்குச் செல்லும் போது உயிரிழந்தாலும் அதைப்பற்றி கவலையில்லை என்று தெரிவித்தனர். என்னிடம் பேசிய இளைஞர்களும் இதுவே தமக்கான கடைசி வாய்ப்பு எனும் கருத்தைப் பிரதிபலித்தனர். அவர்களிடையே ஒரு பதற்றம், ஏக்கம், அச்சம் மற்றும் வேலைப்பளு ஆகியவை வெளிப்பட்டன. அவர்களின் குரலில் பக்தி தெரிந்தாலும் எதிர்காலம் குறித்த நம்பிக்கை குறைவாகவே இருந்தது.

"நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை" என்ற தலைப்பே சமூக ஊடகங்களை ஆக்கிரமித்திருந்தது. அதுவே லட்சக்கணக்கான மக்களை கவர்ந்திழுக்க முக்கியக் காரணியாக அமைந்தது. மக்களின் வாழ்க்கைமுறைக்கும் "அத்திவரதரை" காண்பதற்கும் ஒரு தொடர்பு இருப்பதையும் என்னால் காண முடிந்தது.

"செல்ஃபி" காலாச்சாரத்தில் "இறைவனும்" இழுக்கப்பட்டதை நான் கண்டேன். "ஜல்லிக்கட்டு போராட்டதிலும்" "செல்ஃபிக்கு" முக்கிய இடமிருந்தது. அனைவரும் இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று விரும்பினர். தமது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள், பணியிடத்தில் "தரிசனம் செய்யவில்லை" என்பதைக் கூற விரும்பவில்லை. நீண்ட நேரம் காத்திருந்து "எம்பெருமானை" காண மக்கள் தயங்கவில்லை.

என்னிடம் உரையாடிய பலர், சமூக ஊடகத்தில் சௌகரியமாக "தரிசனம்" செய்வதில் மகிழ்ச்சி அடைந்ததாகத் தெரிவித்தனர். உலகில் எங்கிருந்தாலும் தமக்கு உகந்த நேரத்தில் ஆறுதலாக "தரிசனம்" செய்ய முடிந்தது. அப்படிக் காணும் போது தெளிவாகவும் பல்வேறு பரிமாணங்களும் கிடைத்தன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நம்மிடையே சமூக ஊடகங்கள் அசைக்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றுள்ளன என்பது நிதர்சனமான உண்மை. எதிர்காலத்தில் இதுபோன்ற சமூக ஊடகங்களால் உந்தப்பட்ட மக்கள் கூட்டத்தை அதிகளவில் எதிர்ப்பார்க்கலாம்.

சிவில் நிர்வாகம் மற்றும் காவல்துறை அதிகாரிகள் செய்திருந்த சிறப்பான ஏற்பாடுகள் மூலம் லட்சக் கணக்கானோர் "நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும் நிகழ்வை" கண்டு மனநிறைவு பெற்றனர் என்பதை காழ்ப்புணர்ச்சியின்றி என்னால் கூற முடியும். அனைத்து நிகழ்வுகளைப் போலவும் எங்களுக்கும் இந்த "வைபவத்தில்" இருந்து கற்றுக்கொள்ள நிறைய அம்சங்கள் இருந்தன. எதிர்காலத்தில் நடைபெறும் மாபெரும் நிகழ்வுகளுக்குத் திட்டமிடவும் அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்தவும் இந்த நிகழ்வு ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

ஸ்மார்ட் ஃபோன் போன்ற தொழில்நுட்பங்களும் "அத்திவரதர் வைபவத்தை" ஒரு பன்னாட்டு நிகழ்ச்சியாக மாற்றியது. 48 நாட்கள் மக்களிடையே உணர்ச்சிகள் மேலோங்கி இருந்தன. அந்த நிகழ்வையொட்டி எதிர்ப்பார்ப்புடன் கலந்த ஒரு பரபரப்பு நிலவியது.

கலாச்சார நிகழ்வாக இருக்கட்டும் அல்லது மதத் திருவிழாவாக இருக்கட்டும், காஞ்சி "வைபவம்" மக்களைக் கூட்டுவதிலும் அதைக் கட்டுப்படுத்துவதிலும் பெரும் பங்காற்றியது. அவை மட்டுமின்றி உளவியல் ரீதியாகப் புரிந்து கொள்வதற்கும், மனித உணர்ச்சிகளுடன் விளையாடுவதிலுள்ள சாதக பாதகங்களைக் கற்பதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.

அந்தோ, வாழ்க்கை குறித்த அச்சமும் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மையும் இந்த "அத்திர்வரதர் வைபவத்தில்" முக்கிய பங்காற்றின என்பதும் மறுக்க முடியாத உண்மை.

# இலங்கைத் தேர்தல்: யாழ் மாவட்ட கள நிலவரம் - 2

சிவா பரமேஸ்வரன் --- முன்னாள் மூத்த செய்தியாளர் பிபிசி

எதிர்வரும் ஆகஸ்ட் 5 தேர்தலில், தெரிவாகவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழு.



2015ல் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான 07 உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஒருவரும் களத்தில் உள்ளனர். 2015க்கு முன்னர் தெரிவாகியிருந்த 6 பேர் உட்பட முன்னாள் உறுப்பினர்கள் 14 பேர் போட்டியிடுகின்றனர்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை யாழ் மாவட்ட தேர்தல் களமே மிகவும் பரபரப்புடன் காணப்படுகிறது. கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசென்ற தரப்பினர் மாற்று அணியாகக் களத்தில் இறங்கியுள்ளதால் நான்குமுனை போட்டி நிலவுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போட்டியிடுகின்ற போதிலும் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொண்டது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இங்கு ஏற்பட்ட அவமானம் மீண்டும் ஏற்படக் கூடாது எனும் முன்னெச்சரிக்கையாகக் கூட இதை நோக்கலாம்.

இருப்பினும் பங்காளிக் கட்சிகளான ஈபிடிபி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை தனித்தனியாக களத்திலுள்ளன.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு: (வீடு)

2015 தேர்தலில் தெரிவான மாவை சேனாதிராஜா, த.சித்தார்த்தன், எம்.சுமந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோருக்கு மீண்டும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.




படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். இரவிராஜின் மனைவி சசிகலா பெண் வேட்பாளராகப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

யாழ் மாநகர மேயர் இமானுவேல் ஆர்னல்ட் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பி.கஜதீபன் ஆகியோருக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி: (மீன்)

கூட்டமைப்பிலிருந்து அதிருப்தி காரணமாக வெளியேறியவர்களை உள்ளடக்கிய இந்த மாற்று அணியில் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம். கே. சிவாஜிலிங்கம், என். ஸ்ரீகாந்தா ஆகியோரும் உள்ளனர்.

மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி மீரா அருள்நேசன் ஆகிய இரு பெண்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

2010, 2015ல் கூட்டமைப்பில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான க.அருந்தவபாலன் இம்முறை இந்த அணியில் போட்டியிடுகிறார்.




### அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்: (சைக்கிள்)

2010க்கு முன்னர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இம்முறையும் போட்டியிடுகிறார்கள்.

ஒரு பெண் உட்படச் சட்டத்தரணிகள் மற்றும் இளைஞர்களுக்கு இக்கட்சியில் கூடுதல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி: (வீணை)

1994 முதல் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இம்முறையும் களத்திலுள்ளார். முன்னாள் மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், மனித உரிமைகள் சட்டத்தரணி முடியப்பு ரெமிடியஸ் ஆகியோருடன் பெண் வேட்பாளர் ஒருவருக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

### ஐக்கியத் தேசியக் கட்சி: (யானை)



தனது கணவர் கொல்லப்பட்டதையடுத்து அரசியலில் பிரவேசித்தவர் விஜயகலா மகேஸ்வரன். 2010,2015 தேர்தல்களில் தெரிவானவர்.

ஐதேக பிளவுபட்டாலும் அவர் இம்முறையும் யானை சின்னத்திலேயே போட்டியிடுகிறார்.

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி: (கை)

2015 தேர்தலில் ஐமசுமு சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்டவர் அங்கஜன் இராமநாதன். தேர்தலில் தெரிவாகாத போதிலும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்ற அவர் இம்முறை மீண்டும் போட்டியிடுகிறார்.

ஐக்கிய மக்கள் சக்தி, தவிகூ உட்பட 19 கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிலுள்ளன.

சுயேச்சைக் குழுக்களில் இரண்டு மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்க ஸ்தாபகரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான பொன். ஐங்கரநேசன் மாம்பழம் சின்னத்தில் சுயேச்சைக் குழுவாகக் களமிறங்கியுள்ளார். முன்னாள் மாகாண அமைச்சரான இவர் ஊழல் மற்றும் முறைகேடுகள் குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில் முதலமைச்சரின் நிர்ப்பந்தத்தின் பேரில் பதவி விலகினார்.

இவரது அமைப்பும் மீன் கூட்டணியில் இணைந்து கொள்ளும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் தன்வழி தனிவழி என்று பயணிக்கிறார்.

முன்னாள் ஈபிடிபி உறுப்பினரான முருகேசு சந்திரகுமார் கேடயம் சின்னத்தின் சுயேச்சையாக இம்முறையும் களத்திலுள்ளார்.

1994, 2010 தேர்தல்களில் வீணைச் கட்சியில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தார். கிளிநொச்சியை மையமாகக் கொண்டு தன்னுடைய அரசியல் செயல்பாடுகளை முன்னெடுத்து வரும் இவர் அங்குள்ள மலையக மக்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளார்.

### களநிலவரம்:

கடந்த தேர்தல்களைவிட இம்முறை போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாக்குகளை இலக்கு வைத்து பிரதான கட்சிகள் பெண் வேட்பாளர்களை முன்னிலைப்படுத்தியுள்ளன.

வீட்டுச் சின்னத்தில் சசிகலா இரவிராஜ், மீன் சின்னத்தில் அனந்தி சசிதரன் யானைச் சின்னத்தில் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தமது கட்சிக்காகப் பெண் வாக்காளர்களை கவரும்வகையில் பிரச்சார யுத்திகளைக் கையாள்கிறார்கள். ஏனையக் கட்சிகளிலும் சுயேச்சைக் குழுக்களிலும் பெண் வேட்பாளர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.



யாழ் மாவட்ட தேர்தல் களத்தைப் பொறுத்தவரை போருக்கு பின் வித்தியாசமான ஒரு சூழல் காணப்படுகிறது. கூட்டமைப்பினால் அரசியலில் அடையாளப்படுத்தப்பட்டவர்களே பிரிந்து சென்று தனிக் கூட்டணி அமைத்து களத்தில் நிற்கின்றனர்.

இதுவரை வீணையையும், சைக்கிளையும், யானையையும் எதிர்கொண்ட கூட்டமைப்பு இம்முறை மீனையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஒரே சின்னத்தில் 10 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். விருப்பு வாக்குகளைப் பெறுவதில் அனைத்துக் கட்சிகளிலும் உட்பூசல் இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குறிப்பாக வீட்டுக்குள் பூசல் தீவிரமாகவுள்ளது.

வேட்பாளர்கள் மாவை அணி, சுமந்திரன் அணி என்று பிரிந்து நிற்பதுபோல் தெரிகிறது. வேட்பாளர்கள் ஒருவர் மீது ஒருவர் வெளிப்படையாகவே குற்றச்சாட்டுக்களைக் கூறி பிரச்சாரமும் செய்கின்றனர். இதற்கு உள்ளூர் ஊடகங்களும் துணைபோகின்றன.

சுமந்திரன், சிறீதரன் ஆகியோர் விடுதலைப் புலிகள் தொடர்பாக அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் கட்சிக்குள்ளேயும் வெளியேயும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



“ஆயுதத்தை விரும்பும் ஆட்கள் எனக்கு வாக்களிக்க வேண்டாம். ஆயுதப் போராட்டத்தை நான் ஆதரிக்கவில்லை” என்று சுமந்திரன் தெரிவித்த சில கருத்துக்களும், சுமந்திரனை அன்டன் பாலசிங்கத்துடன் ஒப்பிட்டு சிறீதரன் பேசியதும் கூட்டமைப்பை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் கனடாவிலிருந்து திரட்டப்பட்டு சுமந்திரனிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படும் ரூபாய் 20 கோடி 20 லட்சம் நிதி தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியின் முக்கியஸ்தரான விமலேஸ்வரி காந்தரூபன் முன்வைத்த குற்றச்சாட்டும் உள்ளூர் அரசியலில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலை ஹசொந்தக் காசில் சூனியம் வைத்துக்கொண்டது போல் உள்ளதுஹ, இதனால் தமிழரசுக் கட்சிக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் அது கூட்டமைப்பின் வாக்குவங்கியில் வீழ்ச்சியை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது.

சமூக ஊடகங்கள் மூலம் ஒருவர் மீது ஒருவர் மீது சேறு பூசுதல் தமிழ்க் கட்சிகளில் காணப்படுகிறது.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் வீட்டுக்கு இருந்த ஆதரவ-ில் சரிவு தென்படுகிறது. அந்த நெருக்கடியை மற்ற கட்சிகள் தமக்குச் சாதகமா-கப் பயன்படுத்திக் கொள்ளும் யதார்த்தத்தையும் காண முடிகிறது.

ஐநா போர்க் குற்ற விசாரணையில் இலங்கை அரசைக் காப்பாற்றியது, ரணில் அரசுக்கு முட்டுக் கொடுத்தது, உட்கட்சி மோதல்கள் ஆகியவற்றை மையப்படுத்தி இதர கட்சிகள் மேற்கொள்ளும் பிரச்சாரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கூட்டமைப்பு தத்தளிக்கிறது.




மீன் சின்னத்தில் ஐந்து கட்சிகள் இணைந்திருந்தாலும், விக்னேஸ்வரன் எனும் தனி நபரில் ஆளுமை மற்றும் பலத்தையே நம்பி களத்திலுள்ளனர்.

ஆனால் அவருக்கு எதிராக அப்போது ஆளும் தரப்பினரால் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்த போது மக்களிடையே அவருக்கு இருந்த ஆதரவையும், எழுச்சியையும் இப்போது காணமுடியவில்லை.

அவரது ஆட்சியில் முரண்பாடுகளே அதிகம் காணப்பட்டன. மக்களின் எதிர்ப்பாப்புகளுக்கு அமைய அவரது செயல்பாடுகள் இல்லை எனும் குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.




வீணையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எதிராக வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் வழமையானவை. டக்ளஸ் தேவானந்தாவுக்கென்று கணிசமான வாக்குவங்கி ஒன்று உள்ளது.

இன்றையத் தேவை அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்பு என்று கருதுபவர்களிடையே அவருக்குக் கூடுதல் ஆதரவு உள்ளது. இதன் மூலம் ஈபிடியின் வாங்கு வங்கி சற்று உயரக்கூடும்.

சைக்கிள் கட்சியைப் பொறுத்தவரை வழமைபோல குழப்பம் நீடிக்கிறது. வீட்டுக்கு எதிராக மீன் களத்தில் நிற்பதால் சைக்கிள் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பின் மீது மக்கள் அதிருப்தி கொள்வது அதிருப்தி கொள்வது வழமை. புலிகளின் தலைவர் பிரபாகரனால் ததேகூ உருவாக்கப்பட்டது என்று மக்கள் கருதுவதால், முற்றாக வீட்டைக் கைவிடும் மனநிலையிலும் இல்லை.

தற்போதுள்ள கள நிலவரப்படி கூட்டமைப்புக்கு மூன்று ஆசனங்களே கிடைக்கும் சாத்தியங்கள் உள்ளன.

கூட்டமைப்புக்கு கடும் சவாலை விடுத்துள்ள விக்னேஸ்வரன் கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது என்றாலும், இரண்டாவது இடத்தைப் பெற அவர்கள் அதிகம் போராட வேண்டும்.

வழமைபோல டக்ளஸின் வெற்றியும் உறுதியானதாகவே தெரிகிறது. ஈபிடியும் இரண்டாவது ஆசனத்தைப் பெற முயல்கிறது.

தமிழர் காங்கிரஸும் ஒரு இடத்தைப் பெறக்கூடிய வாய்ப்புள்ளது.

ஐதேக பிளவுபட்டுள்ளதால் அதன் வாக்குவங்கியும் பாதிக்கப்பட்டுள்ளது, இதனால் அவரகள் பிரதிநிதித்துவமும் கேள்விக்குறியே.

மாம்பழம், கேடயம் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் ஆங்காங்கே ஆதரவு இருந்தாலும் ஆசனம் என்பது எட்டாக்கனியாகவே இருக்கும், இருப்பினும் அது மற்றவர்களின் வாக்குவங்கியை பாதிக்கும்.

வீடு-03, மீன்-01, வீணை-01, சைக்கிள்-01 என ஆசனங்கள் பிரிந்தாலும், ஏழாவது இடம் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த ஒரு இடத்தை யானை தூக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

யாருக்கு வெற்றி என்பது அடுத்த ஓரிரு வரங்களில் முன்னெடுக்கப்படும் தீவிரப் பிரச்சாரத்தைப் பொறுத்தே அமையக் கூடும்.

யாழ் மண்ணிலிருந்து யார் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்கள் தமிழர்களாகவே இருப்பார்கள் யாழ் சமூகம் ஒரு அறிவுசார் சமூகம். அவர்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் அது வெளிப்படும் என்றும் நம்பலாம்.

# சரத்குமார்-ராதாரவியிடம் "கணக்குக் கேட்க" உள்ளதாக கும்பகோணம் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அறிவிப்பு

நடிகர்கள் சரத்குமார் - ராதாரவி கூட்டணியிடம் "கணக்குக் கேட்கும்" படலத்தை தாம் ஆரம்பித்திருப்பதாக, 2004ம் ஆண்டும் இடம்பெற்ற கும்பகோணம் பள்ளிக்கூடத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். இதற்காக அவர்கள் விரைவில் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.



கும்பகோணம் பள்ளிக்கூடத் தீ விபத்து 2004, ஜூலை 16ஆம் தேதி நடந்து இன்றுடன் 15 ஆண்டுகள் முடிந்து விட்டது.

இவ்விபத்தில் 94 குழந்தைகள் உடல் கருகி இறந்தனர். இறந்த குழந்தைகள் அனைவரும் 7 வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுதான் சோகம்.

இந்த குழந்தைகளின் குடும்பத்திற்கு உதவ நடிகர்கள் கமல்ஹாசன், ரஜினிகாந்த், விஜய், சூர்யா என பலரும் நிதி அளித்தார்கள். சுமார் 60 லட்சம் வசூல் ஆனதாக அப்போதைய தலைவர் சரத்குமார் கும்பகோணத்தில் வெளிப்படையாக அறிவித்தார். 1 கோடி நிதி சேர்ந்ததும் ஆளுக்கு ஒரு லட்சம் தருவதாகவும் அறிவித்து திரும்பினார். அப்போது கணக்கு வழக்கு நிர்வாகம் எல்லாம் அப்போதைய செயலாளர் ராதாரவி கட்டுப்பாட்டில்தான் இருந்தது.



ஆண்டுகள் 15 ஓடி மறைந்து விட்டது போல சரத்குமார் - ராதாரவி கூட்டணி கும்பகோணம் தீவிபத்தில் இறந்த குழந்தைகள் பெயரில் வசூலித்த ரூ.60 லட்சம் போன இடம் தெரியவில்லை.


இன்று வரை சரத்குமார்-ராதாரவி கூட்டணி வசூலித்த தொகை ஒரு ரூபாய் கூட எங்களுக்கு வந்து சேரவில்லை என வருத்தப்படுகிறார் பலியான குழந்தைகளின் பெற்றோர் சங்க நிர்வாகி இன்பராஜ்.



# கொரோனா தடுப்புக்காக தமிழகத்திற்கு 672 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகத்திற்கு ரூ.672 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது" இதன் மூலம் தமிழகத்தில் தான் அதிகளவு கொரோனா பரிசோதனை செய்யக்கூடியதாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும்,

தமிழகத்தில் இன்னும் 10 நாட்களில் கொரோனா குறையும் என்று கூறுகிறார் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த முதல்வர் பழனிசாமி கூறியதாவது: தமிழகத்தில் 10 நாட்களில் கொரோனா குறைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் தான் கொரோனாவை குறைக்க முடியும். சென்னை மாநகராட்சி பகுதியில் 600-க்கும் மேற்பட்ட காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படுகின்றன. சென்னையில் கொரோனா தொற்று குறைந்து வருகிறது. தமிழக மக்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்கிறது. தமிழகத்தில் தான் அதிகளவு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகத்திற்கு ரூ.672 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது". இவ்வாறு அவர் கூறினார்.

"மார்க்கம் பீச் கடற்கரையில் 26 வது வருடமாக"

கீரிமலை மாவிட்டபுரம் கந்தசாமி தீர்த்தம்

ஆடி அமாவாசை விரதம்

19.07.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 2.00 மணிவரை

தீர்த்தம், தர்ப்பணம், சிவலிங்க பூஜை, வழிபாடு, மோட்ச அர்ச்சனை பிரார்த்தனை
பஜனை, மகேஸ்வர பூஜை (ஆடி அமாவாசை விரதச் சாப்பாடு)

மிசிசாகா பிறம்ரன் ஸ்ரீ கணேசதுர்க்கா தேவஸ்த்தான பிரதம குரு சிவ ஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் அவர்களின் தலைமையில், பல அந்தண சிவாச்சாரியர்களும் கலந்து சிறப்பிக்கிறார்கள். 26வது வருடத்தில் மார்க்கம் பீச் (26071 Park Road, Jackson Point, ON L0E 1L0) கடற்கரையில் காலை 8.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சென்ற வருடங்களைப் போல் இவ்வருடமும் ஆடி அமாவாசை தினத்தில் அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

அடியார்களுக்கு தீர்த்தக் கடற்கரையிலேயே சிறப்பான சுத்தமான கணேச துர்க்கா தேவஸ்தான சைவ விரதச் சாப்பாடு தலை வாழை இலையில் வழங்கப்படும். அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு:-

மார்க்கம் பீச் கடற்கரையில் வழக்கமாக வருடா வருடம் வழமையாக நடைபெறுவது போன்று இம்முறையும் ஆடி அமாவாசை விரதத்திற்காக அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து விரதகார அன்பர்களும் கலந்து கொண்டு வாழ்வில் வளம் பெறுக.

தீர்த்தக்கரையில் சங்கர்ப்பம் செய்து அனைவரும் தீர்த்தமாடி தர்ப்பணம் செய்யும் வசதியும் தலை வாழை இலை அறுசுவை விரதச்சாப்பாடும் மார்க்கம் பீச் கடற்கறையில் மட்டுமே உண்டு

மேலதிக தொடர்புகளுக்கு சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்

905-501-0011 | 905-405-0011 | Cell: 416-271-2181

ஸ்காபரோ - திரு. சின்னத்தம்பி கனகலிங்கம் 416-844-0565, திரு - சோமசச்சிதானந்தம் 647-202-3234

GLORIOUS PRINTERS - 905-471-2500



Amma
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!




Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
NOW IN CANADA
100% Natural
Apple Cider
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471




Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml




Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
Aloe Noni with Aloevera Juice
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

SKN FINANCIAL
www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைவீ வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..(2% முதல்)
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800



அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை



உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

1.5% முதல் 2.0% வட்டி மட்டுமே
(per month)

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும் மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்


416-757-0034
416-994-3861

105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்

எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்

மேலதிகமான உள்ளூர் சமூக வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனாலும், சமூகமாக ஒன்றுகூடும் நபர்களின் தொகை 10 ஆக அதிகரிப்பதனாலும், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.





**உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**, இரண்டு மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்



உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போது, **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**தொடர்ச்சியாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளவும்**



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உயிர்களைப் பாதுகாக்கவும்.**

ontario.ca/coronavirus ஐப் பார்வையிடவும்.
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario


STEELES
PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
Compression Level
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


SHIRIDI SAI SCHOOL OF CANADA
SHIRIDI SAI SCHOOL
ADMISSIONS
OPEN FOR
J/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH

# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

#4

நக்கீரன் - கனடா

இலங்கைத் தீவின் ஆதிக் குடிகள் நாகர், இயக்கர், தேவர் எனத் தெரிய வருகிறது. இதில் தேவர் என்பவர் யார் என்பது தெரியவில்லை.

புத்தர் தனது முதலாவது வருகையின் போது மகியங்கனவில் வாழ்ந்த இயக்கர்களை அங்கிருந்து மலைநாட்டுக்கு அனுப்பி வைக்கின்றார். அதன் பின் தேவர்கள் வந்து கூடினர் என்று மட்டும் மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சம் விசயன் - குவேனிக்கு பிறந்த இரண்டு பிள்ளைகளின் சந்ததியினரை புலிந்தர்கள் (வேடர்கள்) எனக் குறிக்கிறது. ஆனால் வேடர்கள் நாகர்கள் போல பழங்குடி மக்களாக இருந்திருக்க வேண்டும். விஜயனுக்குப் பின்னரே வேடர்கள் தோன்றினார்கள் எனக் காட்டுவதற்காக மகாவம்ச ஆசிரியர் வரலாற்றைத் திரிபு படுத்தியதாகத் தெரிகிறது.

மகாவம்சத்தின் முதலாவது அத்தியாயத்தில் அநுராதபுரத்தை அரசாட்சி செய்த துட்ட கைமுனு (கிமு 161 – கிமு 137) மலபாரை (தமிழர்களை) அடிபணிய வைத்தார் என்ற குறிப்பு வருகிறது.

எனவே நாகர், இயக்கர், தேவர், புலிந்தர், தமிழர் ஆகியோரே இலங்கைத் தீவின் ஆதிக் குடிகளாகக் கருதப்பட வேண்டும். இதில் நாகர்களே எட்டாம் நூற்றாண்டுவரை இலங்கைத் தீவில் 'நாக' அடையாளத்துடன் ஆட்சி செய்திருக்கிறார்கள். இவர்களும் கிபி 7 - 8 ஆம் நூற்றாண்டில் பவுத்த மதத்தின் செல்வாக்குக் காரணமாக பவுத்த நாகர்கள் சிங்களவர் என்ற புதிய அடையாளத்தை பெற்றார்கள். அவ்வாறே தமிழர்களில் பவுத்த சமயத்தைத் தழுவியவர்களும் இந்தப் புதிய அடையாளத்தைப் பெற்றார்கள்.

எனவே சிங்கள இனம் ஒரு கலப்பினம் ஆகும். இலங்கையின் பூர்வீக குடிகளான நாகர், இயக்கர், இராட்சதர், தேவர் போன்ற இனத்தவரே பிற்காலத்தில் சிங்களவர்களாக உருவெடுத்தனர். பவுத்த தேரர்கள் இவர்களுக்கு தனியாடளத்தைக் கொடுப்பதற்காக சிங்கள மொழியை உருவாக்கினார்கள்.

வேடர் விதிவிலக்கு. அவர்கள் தங்கள் தனித்துவத்தை இன்றும் காப்பாற்றி வருகிறார்கள். குவேனி இயக்கர் குலப் பெண் என்று மகாவம்சம் கூறுகின்றது. இராவணன் இராட்சத குல மன்னன் என எண்ணப்படுகிறான்.

இன்றைய சிங்கள இனத்தவர் ஆதி காலத்தில் இந்துக்களாக இருந்து பின்னர் பவுத்தர்களாக மாறினவர்கள். அனுராதபுரத்தை ஆட்சி செய்த தேவநம்பிய தீசன் (கிமு 307 கிபி 267) பவுத்த மதத்துக்கு மாறிய முதல் நாகவம்ச அரசனாவான். மனுதர்மம் போன்ற நூல்கள் முற்பிறப்பில் செய்த வினைப் பயனே சாதியில் மேலோனாகவும் கீழோனாகவும் பிறப்பதற்குக் காரணமென்ற சித்தாந்தத்தை கொண்டவை. இலங்கையில் பவுத்தமானது அதன் முற்போக்குத் தன்மையை இழந்து இந்துத்துவ சிந்தனைமுறையைப் பின்பற்றுகிறது. றதல, கொவிகம ஆகிய ஆதிக்க சாதிகள் தங்களை உயர் சாதியரெனப் பிரகடனப்படுத்த இந்த சித்தாந்தம் உதவுகிறது.

சிங்கள் சமூகத்தில் பல்வேறு வகை சாதிப் பிரிவுகள் காணப்படுகின்றன. அதில் மிக உயர்ந்த சாதியினராக 'றதல' எனும் சாதி இருக்கிறது. இச்சாதியினரே அரச வம்சத்தினருக்கு நெருக்கமாக இருந்துவந்துள்ளனர். கண்டி இராச்சியத்தின்போது சிங்கள சமூகத்தில் செல்வாக்கான நிலையில் இருந்து கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். முன்னாள் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க இந்த வகுப்பைச் சேர்ந்தவர்.

இரண்டாம் இடத்தில் 'கொய்கம' எனும் சாதிப்பிரிவினர் காணப்படுகிறார்கள். இவர்கள் சிங்கள சமூகத்தில் 50 விழுக்காட்டினர் ஆவர். அரசனுக்கு சேவகம் செய்து வந்தவர்களாகவும் பிற்பாடு அவர்களின் செல்வாக்கின் பயனாக நிலவுடமையாளர்களாக மாறினார்கள். சிங்களவர்கள் மத்தியில் ஆதிக்க சாதியான கொவிகம இன்றுவரை இலங்கையின் அரசியல் – பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. விதி விலக்காக சாதி அடுக்கில் மிகவும் பிற்பட்ட இடத்தில் இருந்த இரணசிங்க பிரேமதாச 1988 இல் இலங்கையின் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடுத்து 'கரவா' (கரையோரப் பகுதிமக்கள்) 'பத்கம' (கொய்கம சாதியினருக்க சேவகம் செய்பவர்கள்) 'வக்கும்புர' (சக்கரைத்தொழில்) எனும் சாதிப்பிரிவினர் இடைப்பட்ட சமூகத் தட்டில் இருக்கும் சாதியினராகும்.

றொடியா சாதிப் பெண்கள்றொடியா சாதிப் பெண்கள்

சிங்களச் சமூகத்தின் விளிம்பு நிலைச் சமூகமாக இருப்பவர்கள் 'கின்னர' (காட்டிலுள்ள மூலப்பொருட்களை பயன்படுத்தி பாய்போன்ற கைப்பணிப் பொருட்களை செய்பவர்கள்) 'கஹல' (குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை நிறைவேற்றுவோர்) 'றொடியா' (துப்பரவுப்பணி புரிபவர்கள்.) மற்றும் 'நவன்தன்ன' (கொல்லர்) 'கும்பல்' (குயவர்) 'படு' (சலவைத்தொழில்) 'துறாவ' (சீவல்தொழில்) 'சலாகம' ( (கறுவாத்தொழில்) 'பெறவா' (பறைமேளம் அடிப்பவர்கள்) ஆகியோர் ஆவர்.

இலங்கையில் சிங்கள (பவுத்த மத) சாதியத்தைப் பற்றிக் குறிப்பிடும் மிகவும் பழமைவாய்ந்த மானுடவியல் நூலான 'ஜனவங்சய''வில் 26 சாதிகள் குறிப்பிடப்படுகிறது. மத்தியகால இலங்கையில் இருந்ததாகச் சொல்லப்படும் சாதிகள் 17ஐ ஜே.டி.லெனரோல் குறிப்பிடுகிறார். பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர எழுதிய ''இலங்கை மக்கள்'' எனும் நூலில் 43 சாதிகளின் பட்டியலைக் குறிப்பிடுகிறார்.

1. அஹிங்குந்தய (நாடோடிகள்)
2. பட்டஹல – குயவர்
3. பத்கம – பாரம்பரிய விவசாயிகள் (பிரித்தானிய ஆட்சியின் போது இவர்கள் பல்லக்குத் தூக்கிகளாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்)
4. பெராவ – பறையடிப்பவர்
5. கொவிகம – பாரம்பரிய கமக்காரர்கள் மற்றும் பண்ணையாளர்கள்.
6. ஹாலி – நெசவாளர்கள்
7. ஹன்னாலி – தையற்காரர்
8. ஹூனு – சுன்னக்கல் செய்பவர்கள்.
9. கின்னரய – பாய் பின்னுபவர்கள்.
10. நவந்தன்ன – பொற்கொல்லர். (பல கிளைச்சாதிகளைக்கொண்டது)
11. பமுனு – கூலி விவசாயிகள்
12. பன்ன – புல்வெட்டுவோர்
13. அம்பெட்ட (பனிக்கி) – முடி திருத்துவோர்
14. பட்டி – கால்நடை வளர்ப்போர்
15. பொரவக்கார – மரம் தறிப்போர்
16. றதல – நிலப்பிரபுக்கள் (குறிப்பாக கண்டி இராச்சிய காலத்தில்)
17. ராஜக்க, ஹேன – சலவைத்தொழிலாளர்கள்
18. றொடியா -தாழ்த்தப்பட்டோர்
19. வக்கும்புர (ஹக்குறு) – கருப்பட்டி தயாரிப்பாளர்கள்
20. கராவ – பாரம்பரிய மீன்பிடித் தொழில் செய்வோர்
21. துராவ – பாரம்பரிய படைவீரர் – காலனித்துவத்திற்குப் பின் கள் இறக்குவோர்
22. கட்டர – விவசாயிகள்
23. தெமல கட்டர – தமிழ் தாழ்த்தப்பட்டோர்
24. பட்டஹல (கும்பள்) – குயவர்

*(தொடர்ச்சி 15ம் பக்கம்)*



# சென்னையில் சித்த மருத்தத்தின் மூலம் கொரோனாவை ஒரு வாரத்தில் குணப்படுத்துகிறார்கள



கொரோனா பாதிப்பில் தமிழகத்தின் தலைநகர் சென்னை மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனை ஆகியவை நிரம்பி வழிகின்றன. தினம்தினம் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், சென்னை சாலிக்கிராமம் ஜவகர் பொறியியல் கல்லூரியில் அரசு உதவியுடன் கொரோனா சித்த மருத்துவ வார்டு அமைக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவர் வீரபாபு கண்காணிப்பில் இங்கு கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இங்கு இது வரை 1100 பேர் சேர்க்கப்பட்டதில் 770 பேர் முழுமையாக சுகமடைந்து வீடு திரும்பி விட்டனர். மீதி 330 பேரும் நல்ல நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு அனுமதிக்கப் பட்டவர்களில் சிலருக்கு ஆக்சிஜன் குறைபாடு காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. அவர்களும் குணப்படுத்தப்பட்டுள்ளனர். அதாவது ஆக்சிஜன் அளவு 79க்கு கீழ் இருந்தவர்களும் நலம் பெற்று வீடு திரும்பியதாக, சித்தமருத்துவர் வீரபாபு தெரிவித்தார். “மிகச் சிறந்த உணவு முறை, சித்த மருத்துவ கசாயம், காற்றோட்டம் நிறைந்த சூழ்நிலை ஆகியவை தான் இத்தனை வெற்றிக்கும் காரணம்” என்று, டாக்டர். வீர பாபு மேலும் தெரிவித்தார்.

(அதேநேரம் கடும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு, சுவாசக்கருவிகளின் உதவி தேவைப்படுபவர்கள் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்).

## மூலிகை குடிநீர்

இங்கு கொரோனாவைக் குணப்படுத்த அப்படி என்ன தான் கொடுக்கப்படுகிறது? அரசு பரிந்துரைத்த கபசுரக் குடிநீருக்கு துணை மருந்தாக மூலிகைத் தேநீர் (Herbal tea) கொடுக்கப்படுகிறது. அதோடு, கொரோனா நோயாளிகள் மூடிய அறைக்குள் அடைந்து கிடக்காமல், காலை-மாலை நடை மேற்கொள்ளவும், எளிய உடற்பயிற்சி, யோகாசனம் செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள். விருப்பமுள்ளவர்கள் கிரிக்கெட் கூட விளையாடுகிறார்கள். காய்ச்சல் அதிகம் இருந்தால் பாரசிட்டமால் கொடுக்கப்படுகிறது.

இதனால், ஆரோக்கியமான சூழ்நிலையில் ஒரே வாரத்தில் பலரும் குணம் அடைந்து விடுகிறார்கள்.

இங்கு வழங்கப்படும் மூலிகைத் தேநீரில் என்னென்ன பொருட்கள் சேர்க்கப் படுகின்றன என்பதை, மருத்துவர் வீரபாபு, மக்களுக்கு வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

அதன்படி, மூலிகைத்தேநீர் தயாரிக்கத் தேவையானவை பின்வருமாறு:

| | |
|---|---|
| சுக்கு | - 100 கிராம், |
| அதிமதுரம் | - 100 கிராம், |
| சித்தரத்தை | - 30 கிராம் |
| கடுக்காய்த்தோல் | - 30 கிராம் |
| மஞ்சள் | - 10 கிராம், |
| திப்பிலி | - 5 கிராம், |
| ஓமம் | - 5 கிராம் |
| கிராம்பு | - 5 கிராம், |
| மிளகு | - 5 கிராம் |

(மேற்குறிப்பிட்ட அனைத்தும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்).

இவற்றை இடித்துப் பொடிசெய்து ஒரு டப்பாவில் பத்திரப்படுத்தவும்.

ஒரு பாத்திரத்தில் 400 மி.லி. தண்ணீர் விட்டு அதில் இந்த பொடியை 10 கிராம் அளவு போட்டு நன்கு கொதிக்க வைக்கவேண்டும். தண்ணீர் கொதித்து 100 மி.லி. அளவாக வற்றியதும் ஒரு தேக்கரண்டி நாட்டுச் சர்க்கரை அல்லது 10 மி.லி. அளவு தேன் சேர்த்து கிளறி, இறக்கி ஆற வைக்கவேண்டும்.பின்பு இதை வடிகட்டி காலையிலும், இரவிலும் உணவிற்கு பின்பு குடிக்க வேண்டும்.

பொதுவாக கொரோனா சிகிச்சையில் உள்ளவர்களுக்கு கபசுரக் குடிநீர், உணவுக்கு முன்பும், இந்த மூலிகைத் தேநீர் உணவுக்குப் பின்பும் கொடுக்கப்படுகிறது.

மூலிகைத்தேநீர் அடுப்பில் கொதிக்கும் போது 5 கற்பூரவல்லி இலைகளும், 10 புதினா இலைகளும் சேர்த்தால் இன்னும் சிறப்பு.

இந்த மூலிகைத் தேநீரை பெரியவருக்கு ஒருவேளைக்கு 100 மி.லி. அளவும், சிறுவர்களுக்கு இதில் பாதி அளவும்(50 மி.லி) கொடுத்தால் போதும். இதை கொரோனா அறிகுறிகள் குணமாகும் வரை கொடுக்க வேண்டும்.

கொரோனா இல்லாதவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, இதை தினமும் காலையில் ஒருவேளை குடித்து வரலாம். பத்தியம் எதுவும் கிடையாது.

கொரோனாவுக்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படாத நிலையில், சித்தமருத்துவத்தில் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள இதுபோன்ற மூலிகை மருந்துகள் நோயை தணித்து வருவதாகவும், தமிழக அரசின் ஆதரவோடு இங்கு முழுக்க முழுக்க இலவசமாகவே சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், மருத்துவர் வீரபாபு தெரிவித்தார்.

## உயர்நீதிமன்றம் பாராட்டு


கொரோனாவால் எந்த உயிரிழப்பும் இல்லாமல் சிறப்பாக கட்டுப்படுத்தி, குணப்படுத்தியதாக ,சென்னை உயர்நீதிமன்றம் சித்த மருத்துவர் வீரபாபுவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

இந்த சித்த மருத்துவ வார்டில் சிகிச்சை பெற்ற ஒரு இளம்பெண் தனது அனுபவம் பற்றி கூறும்போது, ”நான் மருத்துவப்படிப்புக்காக “நீட்“ தேர்வு எழுதத்தயாராகி வருகிறேன். இப்போது சித்த மருத்துவத்தின் சிறப்பை நேரிலேயே உணர்ந்து கொண்டேன். எனவே, நானும் சித்த மருத்துவம் படிக்கலாமா என்று யோசித்து வருகிறேன்” என்றார்.

*--- மணிராஜ், --*
*திருநெல்வேலி.*


# The Secret of LIBERATION

## Devaaseer Lankadieu




You'll find the values of the art of purification of the 'self ' in this book. As you read, you will understand the secret that was hidden till date. And this Revelation will bring you the joy of living.

People in the past were aiming to procure health, wealth, joy, peace, and the most aspired deathless life; but it was in vain. The craving for deathlessness was one thing that was not achieved by anybody in the planet. This book paves the way for Immortality.

“Eighteen virtues mentioned in this book are like gems of a crown,” says Devaaseer Lankadieu. “Practicing these virtues one is sure to reach the goal - Immortality.”

'The Magnificent' sustains the whole world, both animate and inanimate things. When we realize the mysterious power of the Creator, we will be filled every minute with gratitude. You must be always full of joy whey your heart is full of gratitude for this life on earth.

Devaaseer Lankadieu with his profound research on all scriptures across all faiths, summarizes herein, the virtues and the path to attain Liberation or Mukthi, that has been kept as an Eternal secret since the beginning of the world.

The book, “The Secret of LIBERATION” is for the people who will enter into Dharma Yuga or Millennium.

**Website:** www.thesecretofliberation.com

Shop Online at

amazon Flipkart goodreads

**Hardback** 978-1-5437-0535-5 **Paperback** 978-1-5437-0534-8 **E-book** 978-1-5437-0536-2

### யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகிறார்...

# "புனிதமிழந்த கோஷங்கள்"



அமெரிக்க எழுத்தாளரான எர்னெஸ்ட் ஹெமிங்வேயின் உலகப் புகழ்பெற்ற நாவல் "போரே நீ போ" இந்நாவலின் இறுதிக்கட்டத்தில் அதன் பிரதான கதாபாத்திரம் தனக்குள் சிந்திப்பதாக பின்வரும் தொனிப்பட ஒரு பந்தி உண்டு "அமைதி சமாதானம் யுத்த நிறுத்தம் நல்லிணக்கம் போன்ற வார்த்தைகள் அவற்றின் புனிதத்தை இழந்துவிட்டன. இப்பொழுதும் புனிதமிழக்காமல் இருக்கும் வார்தைகள் எவை என்று பார்த்தால் வீதிகளின் பெயர்கள் நகரங்களின் பெயர்கள் படையணிகளின் பெயர்கள் படைப் பிரிவுகளின் பெயர்கள் போன்றவைதான்".

இது ஒரு யுத்த களத்தை பற்றிய சித்திரிப்பு. ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 11 ஆண்டுகளின் பின் இலங்கைத் தீவில் தமிழ்ப் பகுதிகளில் தேசம் தேசியம் தாயகம் சுயநிர்ணயம் உரிமை விடுதலை போன்ற வார்த்தைகளும் அவற்றின் புனிதத்தை இழந்து விட்டனவா? என்று கேட்கத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் ஒன்றை ஒன்று வெட்டும் சந்தியில் சுவர்களில் டக்ளஸ் தேவானந்தாவின் ஒரு சுவரொட்டி




ஒட்டப்பட்டிருக்கிறது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது... "தமிழர் தேசம் தலை நிமிர வீணைக்கு வழங்கும் ஆணை விடியலைத் தரும் நாளை" இங்கு அவர் தேசம் என்று கருதுவது எதனை? அவர் கருதும் தேசத்துக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கும் "ஒரு நாடு இரு தேசத்தில்" வரும் தேசத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? அவர் கருதும் தேசத்துக்கும் கூட்டமைப்பு முன்வைக்கும் தேசத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? அவர்தான் கூறவேண்டும்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் அங்கஜன் ராமநாதன் விநியோகித்த ஒரு துண்டுப் பிரசுரத்தை பார்த்தேன் அதில் அவர் "எனது அரசியல் நிலைப்பாடு" என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறுகிறார்... "தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை நான் நன்கு புரிந்து கொண்டவன். என்னால் முடிந்த அளவுக்கு எமது மக்களின் அரசியல் பொருளாதார சமூக மற்றும் கலாச்சார முரண்பாட்டுக்கு உழைக்க வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையிலேயே நான் அரசியலுக்குள் பிரவேசித்தேன். எமது மக்களின் உரிமைக்கான போராட்டத்தை எந்த சந்தர்ப்பத்திலும் நான் காட்டிக் கொடுக்கவும் இல்லை அதற்கு எதிராகச் செயற்படவும் இல்லை...".

அங்கஜன் யார்? எந்தக் கட்சியின் சார்பாக அவர் தேர்தலில் நிற்கிறார்? அவருடைய கட்சிக்கும் இனப்பிரச்சினைக்கு எந்த சம்பந்தமும் இல்லையா? இறுதிக்கட்டப் போரை முன்னெடுத்தது அவருடைய கட்சி இல்லையா?

கிழக்கில் ஓரிடத்தில் கருணா கோட்டும் சூட்டுமாக நிற்கும் ஒரு படத்தின் கீழ் "எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்" என்று எழுதப்பட்டு ஒரு கட்டவுட் வைக்கப்பட்டுள்ளது. இது அவர் முன்பு புலிகள் இயக்கத்தில் இருந்த பொழுது தளபதியாக இருந்த ஜெயந்தன் படையணியின் இலட்சிய வாசகம் ஆகும். இங்கு கருணா கூறவருவது யாருடைய வெற்றியை?

இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு கேள்வி எழும். தென்னிலங்கை மைய கட்சிகள் அல்லது தமிழ்தேசிய நிலைப்பாட்டை கொண்டிராத கட்சிகள் அல்லது தமிழ்தேசிய நிலைப்பாட்டுக்கு எதிரான கட்சிகள் தமிழ் தேசியவாதிகளின் கோஷங்களை முன்வைக்கின்றன. என்று சொன்னால் அதன்மூலம் அவர்கள் வாக்காளர்களை கவர நினைக்கிறார்களா? ஒரு கோஷத்தை முன் வைக்கும் அரசியல்வாதியின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இருக்கக் கூடிய வேறுபாட்டை வாக்காளர்கள் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்று அவர்கள் நம்புகிறார்களா? அவ்வாறு கோஸங்களுக்கும் செயல்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய முரண்பாட்டைக் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு தமிழ் தேசியவாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்களின் வாழ்க்கையும் செயலும் அமைந்து விட்டனவா? அதாவது தமிழ்த் தேசியவாதிகளின் அரசியல் ஒழுக்கத்துக்கும் தமிழ்த் தேசியவாதிகளல்லாத அரசியல்வாதிகளின் அரசியல் ஒழுக்கத்துக்கும் இடையிலான வேறுபாடு சிறுத்துப் போய் விட்டதா?



ஒரு தேர்தல் கோஷம் எனப்படுவது வெறும் சொல்லு அல்ல. அது ஒரு மந்திரம் அது ஒரு செயல் அது ஒரு வாழ்க்கை முறை. அது இரத்தத்தினாலும் தசையினாலும் உருவாக்கப்பட்ட ஒன்று. ஒரு கட்சி அல்லது அமைப்பின் தொடர்ச்சியான செயற்பாட்டால் தியாகத்தால் உயிர் ஊட்டப்பட்ட ஒன்று. கட்சித் தியாகிகளின் பல வருடகால உழைப்பின் திரண்ட சொல். அவ்வாறு தன் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே வேறுபாடு அற்ற ஒரு அரசியல் வாழ்க்கையை கொண்டிருக்கக்கூடிய ஓர் அரசியல்வாதிதான் தன் வாழ்க்கையின் பிழிவாகக் காணப்படும் அல்லது அவருடைய வாழ்க்கையின் சாராம்சமாக காணப்படும் ஒரு கோஷத்தை முன் வைக்கும் பொழுது அதற்கு ஒரு உயிர் இருக்கும் அதற்கு ஒரு செயல் வேகம் இருக்கும் அதற்கு ஒரு புனிதம் இருக்கும் அதற்குள் ஒரு நெருப்பு இருக்கும். மார்க்சியவாதிகள் கூறுவதுபோல அந்தக் கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்.

ஆனால் தமிழ்த் தேசிய அரங்கில் பெரும்பாலான அரசியல்வாதிகளின் செயல்களுக்கும் சொற்களுக்கும் இடையே பாரதூரமான இடைவெளி உண்டு குறிப்பாக கடந்த பதினோரு ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக காணப்படும் கூட்டமைப்பு தாயகம் தேசியம் சுயநிர்ணயம் போன்ற தோ'ங்களின் புனிதத்தை இல்லாமல் செய்து விட்டது. அதுமட்டுமல்ல விடுதலை சுதந்திரம் போராட்டம் போன்ற சொற்களின் புனிதத்தையும் அவர்கள் அழித்து விட்டார்கள்.

கடந்த 11 ஆண்டுகளாக நாட்டில் எந்த ஒரு போராட்டத்தையும் அவர்கள் முன் நின்று நடத்தவில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மக்கள் போராடிய போது அந்த போராட்ட கொட்டிலுக்குள் அவர்கள் போய் குந்தி இருந்தார்கள் என்பதே சரி. அவர்கள் சுதந்திரம் என்று கருதும் ஒன்றுக்காக அல்லது விடுதலை என்று கூவித் திரியும் ஒன்றுக்காக அவர்கள் எதை தியாகம் செய்திருக்கிறார்கள்? எந்த அளவுக்கு ரிஸ்க் எடுத்தார்கள்? இக்கேள்விகளுக்கு துணிந்து பதில் சொல்லத்தக்க கூட்டமைப்பு அரசியல்வாதிகள் எத்தனை பேர் உண்டு?

இதுதான் பிரச்சினை கடந்த 11 ஆண்டுகளாக தமிழ் பிரதிநிதிகளாக காணப்பட்ட கட்சியின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இருந்த பாரதூரமான வேறுபாடு இம்முறை தேர்தலில் தமிழ் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளும் தேசம் உரிமை என்றெல்லாம் கூறும் ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறதா?

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சட்டச் செயற்பாட்டாளரான ஒரு புலமையாளர் சொன்னார்... "இம்முறை கூட்டமைப்பின் சுவரொட்டிகளையும் கோஷங்களையும் கவனித்தீர்களா? அவர்களில் அனேகமானவர்கள் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் போன்ற சொற்களை தவிர்ப்பதாக எனக்கு தோன்றுகிறது. மன்னாரின் சாள்ஸ் நிர்மலநாதன் போன்ற சிலரைத் தவிர பெரும்பாலான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதைவிட வேறு கோ'ங்களை விரும்பி பயன்படுத்துவதாக தெரிகிறது" என்று. இருக்கலாம். அவர்கள் அவ்வாறு பாவிப்பார்களாக இருந்தால் அது அந்த கோஷங்களுக்கும் நல்லது தமிழ் மக்களுக்கும் நல்லது. அதில் ஒரு நேர்மை இருக்கிறது. தாங்கள் வாழ்ந்து காட்டாத ஓர் அரசியலுக்கு உரிய கோஷங்களை அவர்கள் பயன்படுத்தாமல் விடுவது நல்லது.

விக்னேஸ்வரனின் கூட்டு தனது முதன்மைக் கோஷத்தை "தன்னாட்சி தற்சார்பு தன்னிறைவு" என்று மாற்றிக்கொண்டு விட்டது. ஏன் மாற்றியது?

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளும் ஒரு விடயத்தை உறுதிப்படுத்த வேண்டும். தாங்கள் முன்வைக்கும் கோஷங்களுக்கும் தமது செயற்பாடுகளுக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்பதனை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். செயலுக்கு போகாத கோஷங்கள் வெற்றுச் சொற்களே. கிலுகிலுப்பைகளே. அவை மக்களை செயலுக்குத் தூண்டுவதில்லை. சனங்கள் கோ'ங்களைக் கேட்டா வாக்களிக்கிறார்கள்?

எனவே தாங்கள் செய்யாத ஓர் அரசியலை கோ'மாக முன்வைக்கும் தமிழ்க் கட்சிகள் அந்தச் சொற்களின் புனிதத்தை அழிக்கின்றன. மாறாக தாங்கள் முன் வைக்கும் இலட்சிய வாசகங்களின்படி வாழ்ந்து காட்ட வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சொற்களுக்குச் சக்தி பிறக்கும். அவ்வாறு தாம் முன்வைக்கும் கோஷங்களுக்குத் தமது வாழ்க்கை முறையால் உயிரூட்டும் அரசியல் வாதிகள் யாருண்டு? மக்களே அவர்களுக்கு வாக்களியுங்கள்.

---

(13ம் பக்கத் (தொடர்ச்சி)

## இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

25. ஹன்னலி – தையற்காரர்
26. ஹின்ன – சலாகம சாதியனருக்கான சலவைத்தொழிலாளர்
27. ஹாலி – நெசவு, ஐரோப்பியர் காலத்தில் கருவா தொழில்
28. கஹல – கொலைத் தண்டனை நிறைவேற்றுவோர், சுத்திகரிப்போர்
29. கின்னர – பாய் பின்னுவோர்
30. ரதா – உயர்சாதியினருக்கு உடைதுவைப்போர்
31. ஹின்ன – மாவு சலிப்போர்
32. சலாகம – கருவா செய்கையில் ஈடுபடுவோர்

சிங்கள சாதியமைப்புக்கும் தமிழ் சாதியமைப்புக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். கரவ, துரவ, சலகம போன்ற சிங்கள சாதிகள், தென்னிந்தியாவில் இருந்து, குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவர்கள். இதற்கான வரலாற்று சான்றுகள் உள்ளன. பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தன உட்பட அதிதீவிர சிங்கள – பவுத்தர்கள் தமிழ்ப் பரம்பரையில் வந்தவர்கள். இவர்களே சிங்கள – பவுத்த தேசியத்தை உருவாக்கியவர்களில் முன்னிலை வகித்தார்கள். சிங்களவர்களின் மத்தியில் இன்றைக்கும் காணப்படும் ஒவ்வொரு சாதியும் தனக்கென தனியான வரலாற்றைக் கொண்டுள்ளது. சிங்கள சாதிகள் எல்லாமே தென்னிந்தியாவை பூர்வீகமாக கொண்டுள்ளன.

கரவா, சலாகம, துறாவ சாதியினர் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் தமிழ்நாடு மற்றும் இன்றைய கேரள (சேரநாடு) நாடுகளில் இருந்து கொண்டு வந்து தென்னிலங்கையில் குடியேற்றப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பான்மை மீனவ சாதியினர். சிறுபான்மை படையினர்.

பண்டாரநாயக்கவின் மூதாதையர் கூட, தமிழ்நாடு மற்றும் கேரளம் இரண்டிலும் இருந்து வந்தவர்களே. நாயக்க என்ற பின்னொட்டுப் பெயர்களைக் கொண்டோர் தமிழ் பின்னணியைக் கொண்டவர்களே.

துறாவ வகுப்பினர் கேரளத்து ஈழவர், தமிழ்நாட்டு நாடார் வகுப்பினரோடு ஒத்தவர்கள். இன்றைய வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர துறாவ வகுப்பைச் சேர்ந்தவர் ஆவர்.

அஸ்கிரியா – மல்வத்தை பவுத்த பீடங்கள் கொய்கம தவிர்ந்த ஏனைய சாதியினரை சங்கத்தில் சேர்ப்பதில்லை. இதனால் கரவா. சலாகம மற்றும் துவார சாதிகளைச் சேர்ந்தவர்கள் மைனமார் சென்று குருப்பட்டம் சூட்டிக் கொண்டார்கள். இவர்கள் அமரபுர என்ற பவுத்த மத பீடத்தை நிறுவினார்கள். இந்த சாதியினர் சிலர் சாதிப் பாகுபாடு காரணமாக கிறித்தவர்களாக மாறினார்கள்.

கொய்கம சாதிப் பிரிவுக்கு அடுத்ததாக உள்ள கரவா அல்லது மீனவ சாதியினர். இவர்களை தென்னிலங்கை கரையோரப் பகுதிகளில் செறிந்து வாழ்கிறார்கள். மொத்த சிங்கள மக்களது தொகையில் 10 விழுக்காட்டினர் இந்த சாதியைச் சேர்ந்தவர்களே. இவர்கள் நீர்கொழும்பு, புத்தளம், வென்னப்புவ, கொழும்பு வடக்கு, மொறட்ருவா, பாணந்துறை போன்ற நகரங்களில் செறிந்து வாழ்கிறார்கள்.

பவுத்த மதம் சாதி பாராட்டுவதில்லை. புத்தர் தனது காலத்தில் சகல சாதியினரையும் சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். பிறப்பு என்பது அவனவன் செய்த தீவினை நல்வினை என்ற இருவினைப் பயனாக தீர்மானிக்கப்பட்டுவிட்டன என்ற கருத்தாக்கங்களை புத்தர் நிராகரித்தார். "ஒருவன் தன் பிறப்பால் பிராமணனாகவோ விலக்கப்பட்டவனாகவோ மாறுவதில்லை. அவனது நடத்தையே அவனது குணத்தைத் தீர்மானிக்கின்றமது. நடத்தை மட்டுமே முக்கியம்" என்றார். புத்தரின் கருத்து திருக்குறளிலும் காணப்படுகிறது. *(வளரும்)*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 904



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்
### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடுஈ பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில், அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற, பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று, பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை
ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகளாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி, அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்''
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

**இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடு நாமும் நலமடைந்து, உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.**

இலங்கை இந்தியா உட்பட உலகெங்குமுள்ள பல நாடுகளிலும் சக்தி வழிபாடு பிரசித்திபெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. பல பிரசித்திபெற்ற சக்தி ஆலயங்கள் தான்தோன்றியாக அமைந்து அருட்சக்தியை அள்ளிக் கொடுப்பனவாக அமைந்துள்ளன. இந்துமதத்தின் ஒரு பிரிவாகச் சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதமாகச் சாக்தம் காணப்பட்டபோதிலும், தற்காலத்தில் சாக்தம் என்ற பிரிவு தனித்துவம் பெற்றதாகக் காணப்படவில்லை. எட்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஸ்ரீ சங்கரபகவத்பாதர் அறிமுகப்படுத்திய அறுவகை வழிபாட்டில் ஒன்றாகச் சாக்தம் திகழ்ந்தது.

ஈழத்திலே சக்தி அருள்பிரவாகமெடுக்கும் பல சக்தி வழிபாட்டுத்தலங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நயினை நாகபூசணி அம்பாள், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள், திருகோணமலை பத்திரகாளி அம்பாள், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள், யபழ்ப்பாணம் வீரமாகாளி அம்பாள், புளியங்கூடல் மகாமாரி அம்பாள், சீரணி நாகம்பாள் போன்ற பல அன்னையின் அருட்பிரவாகம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறே ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பல சக்தி வழிபாட்டுத்தலங்களை அமைத்து வழிபாடியற்றி வருகின்றனர். ரொற்னரோ துர்க்காபுரத்திலுள்ள ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், டென்மார்க் பிராண்டா பதியிலுள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயம் போன்றவை பல்வேறினத்தவர்களையும் தன்பால் ஈர்த்து, தமிழர்களின் கலை, கலாச்சார வளர்ச்சிக்கு உதவி உடல், உள ரீதியான துன்பங்களைப்போக்கி அருள்பாலிக்கும், அருள்ஈர்ப்புக் கொண்ட சக்தி தலங்களாகப் போற்றப்படுகின்றன.

இலங்கையின் தலைநகராக விளங்குகின்ற கொழும்பிலும் பல சக்தி வழிபாட்டுத் தலங்கள் அருட்சக்தி கொண்டவையாக விளங்குகின்றன. இந்துசமயத்தைச் சார்ந்தோர் மட்டுமன்றி ஏனைய மதங்களைச் சேர்ந்தோரும் இப்பிரதேசத்திலுள்ள அன்னை வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வணங்குவது பண்டுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. இந்த வகையிலே கொழும்பு வெள்ளவத்தையில் மயூரபதி என்றழைக்கப்படும் பகுதியில் அருளாட்சி புரிந்துவரும் மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் சகல இன மக்களிடையேயும் மிகப் பிரபல்யம் பெற்ற ஆலயமாகக் காணப்படுகின்றது.

*வளரும்...*

---

வீணை மைந்தன்

# #4 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

பெட்டிச் செய்தி:

நடிகர் திலகம் மறைந்த செய்தி அறிந்து மிகுந்த மனக் கவலையுடன் அன்று முழுவதும் வீட்டிலேயே இருந்தேன். "சண் உங்களை வானொலியில் கூப்பிடுறாங்கள்" என்றார் நண்பர் கனக்ஸ்

"எந்த வானொலி",

"கீதவாணி" சிவாஜிக்கு அஞ்சலி செய்கிறார்கள். நீங்கள் அவசியம் அதில் கலந்து கொள்ள வேண்டும் என "வானொலியில் சில அன்பர்கள் தேடுகிறார்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்"



இச் செய்தி வந்தபோது மணிமேகலைப் பிரசுரம் திரு. ரவி தமிழ்வாணன் ரொரென்டோ நகருக்கு வந்திருந்தார்.

"சிவாஜி ரசிகர் ஒருவரை வானொலிக்காக அழைத்து அஞ்சலி உரை நிகழ்த்தப்பட்டது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது அவர் பெயர் வீணை மைந்தன் சண்முகராஜா என அறிந்துகொண்டேன்" இவ்வாறு அவ்வாறு வெளியான உதயன் இதழில் திரு. ரவி தமிழ்வாணன் குறிப்பிட்டிருந்தார்.

---

சிவாஜி நினைவு நாள் சிறப்பு கட்டுரை:

கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களின் நாயகனாக விளங்கும் நடிகர் திலகம் அவர்களின் 19வது ஆண்டு நினைவு நாள் 21. 7. 20 நினைவுபடுத்தும் விதமாக இவ்வார இதழில் இக்கட்டுரை இடம்பெறுகிறது. "படிப்பதற்கு நீ எங்கள் பல்கலைக் கழகம்" எனும் பாராட்டுக் கவிதையில் இடம் பெற்ற "வருங்கால தலைமுறைகள் வரலாற்றைப் புரட்டுங்கால், வடிகாலாய் விளங்கிடுமே நீ நடித்த பாத்திரங்கள்.... எனும் கவிதை வரிகளுக்கு ஊடாக அவரது விஸ்வரூபத்தை மனத்திரையில் கண்டு பிரம்மிக்கின்றேன், ஆராதனை செய்கின்றேன்.

"நடிகர் திலகம்" அவர்களின் மாபெரும் ரசிகர்களில் ஒருவனாக என்னை தகுதியாக்கிக் கொண்டதில் மிகவும் பெருமை கொள்கிறேன். அருகிருந்து அவரது சுவாசக் காற்றை உள்வாங்கிய வண்ணம் அவருடன் உரையாடி மகிழ்ந்தவன், அவர் குடும்பம் உணவு பரிமாற உண்டு களித்தவன் யான்.

விதி சமயங்களில் வேடிக்கையானது. சில சமயங்களில் கொடூரமானது. மறைந்த நடிகர் திலகம் 1998ல் நடந்த தேர்தல் ஒன்றில் ஓட்டு போட போன போது அவருடைய வாக்கை அவருக்கு முன்பே யாரோ போட்டிருந்தார்கள். திடுக்கிட்டுப் போன அவர் தன் நெஞ்சில் கையை வைத்து அடப்பாவி என்னோட வாக்குரிமையைப் பறிச்சிட்டேயப்பா" எனக்கூறி சிரிப்பலை எழுப்பினார் (இச்சம்பவம் தான் இளையதளபதி விஜய் அவர்களின் சர்கார்" படத்தின் ஒன் லைன் ஸ்டோரி.

2001 ஜூலை 21 அன்று இரவு சுமார் எட்டு மணிக்கு விதி இதயநோய் வடிவில் வந்து அவர் சிந்திக்கும் உரிமையைப் பறித்துச் சென்ற போது, தமிழ் கூறும் நல்லுலகம் சோகத்தில் மூழ்கியது. கலையுலகில் 50 வருடங்கள், சுமார் 300 திரைப்படங்கள். சினிமா. சிவாஜி கணேசனுக்கு தொழில் அல்ல வாழ்க்கை. அவர் மறைந்திருக்கலாம் ஆனால் வெள்ளித்திரையிலும் நாடக மேடையிலும் அவர் பதித்த முத்திரைக்கு அழிவே இல்லை. "தாங்கமுடியாத சோகத்தால் துவண்டு போயிருக்கிறேன்.

சிவாஜிகணேசன் திரையுலகில் ஒரு புரட்சியை படைத்தவர் என்றார் பராசக்தி படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதிய மறைந்த முன்னாள் முதலமைச்சரும் சிவாஜி கணேசன் அவர்களின் நெருங்கிய நண்பருமான கலைஞர் மு கருணாநிதி". 24வது வயதில் பராசக்தியில் சிவாஜி அவர்களின் சினிமா பயணம் ஆரம்பமானது. ஜாதி வெறி, ஊழல் மூடநம்பிக்கை போன்ற சமூக சீர்கேடுகளை சாடும் புரட்சிப் படமான அதுதான் தமிழ் சினிமா உலகிற்கு ஒரு அரிய வரப்பிரசாதத்தை அறிமுகப்படுத்தியது. அந்த படத்தின் மூலம் தான் தாய்த் தமிழ் மொழி மீது தமிழர்களுக்கே காதல் வரும்படி வசனங்களை பேசி புதுப் புது முக பாவங்களையும் உடல் மொழியையும் காட்டி அடுத்து வந்த பல தலைமுறைகளுக்கு முன்னோடியானார் சிவாஜி.



"பிரிட்டி'காரர்களுக்கு இந்தியர்களின் வீரம் பற்றி பாடம் புகட்டிய வீரன் கட்டபொம்மனாக அவர் நடித்ததை புரிந்துகொள்ள தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை கூர்மையான வசனம் கத்தியை விட ஆழமாகப் பாயும் என்பதை உணர்த்திய அற்புதமான நடிகர் சிவாஜி என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்" அப்போதைய மறைந்த பிரதமர் வாஜ்பாய் அவர்கள்.

"சிவாஜி ஒரு லட்சம் சம்பளம் வாங்கினால் 10 லட்சத்திற்கு நடித்து கொடுத்துவிடுவார்" என்பார்கள். திரையுலகில் அவ்வளவு செறிவை திரட்சியை நடிப்பில் கொண்டு வந்து கொட்டும் உணர்ச்சிப்பூர்வ கலைஞர் அவர்.

வசனம் பேசுவதில் தனக்கென தனிப் பாணியை உருவாக்கிக் கொண்ட சத்யராஜ், நடிகர் சிவகுமார் ஒரு தடவை "சிவாஜியின் வீர வசனங்கள்" என்ற புத்தகத்தை கொடுத்து அதை மனப்பாடம் செய்து தன்னிடம் ஒப்பிக்க சொன்னார். அப்போது நான் உருபோட்ட சிவாஜி சாரின் வசனங்களும், அந்த ஏற்ற இறக்கங்களும் இன்றைக்கும் தொழில் ரீதியாக உதவுகிறது என்கிறார் நன்றியோடு.

ஜப்பானிய இயக்குனர் "அகிரா குரசோவா" இயக்குனர்களின் இயக்குனர் என்பார்கள் அதுபோல் சிவாஜி ஒரு 'Actor's Actor' நடிகர்களின் நடிகர் ஆவார்.

சிவாஜி அவர்கள் கலைத்துறையில் காலடி எடுத்து வைத்த நேரத்தில் தமிழகத்தில் பலவித மாற்றங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலம் அது. அடுத்து திராவிட இயக்கம் எழுச்சி பெற ஆரம்பித்தது தொழில்மயமாதல் மேற்கத்திய மயமாதலும் சேர்ந்து பாரம்பரிய நம்பிக்கைகள், வரலாற்று பெருமைகளை அசைத்துப் பார்த்ததும் அப்போதுதான்.

அந்த சமயத்தில் தான் சிவாஜி "கட்டபொம்மனாக" "கப்பலோட்டிய தமிழர் வ. உ. சியாக" "பாரதியாக" "கர்ணன்" "சிவபெருமான்" "அப்பர்" "அம்பிகாபதி" "பகத்சிங்" "திருப்பூர் குமரன்" "ராஜராஜ சோழனாக" தோன்றி அந்த தலைமுறையினரிடம் தமிழக கலை கலாச்சாரத்தை பிரதிபலித்ததில் அவரே கலாச்சாரச் சின்னம் ஆக முடிந்தது.

அவரது சமகாலத்தில் பிற மொழிகளில் நடித்த நாயகர்களை போலல்லாமல் சிவாஜி அவர்கள், எம்ஜிஆர் என்கிற இன்னொரு வெகுஜன நடிகரை எதிர்கொள்ள வேண்டிய சவால் இருந்தது. இருந்தாலும் நடிப்பில் புதுப்புது நுட்பங்களைக் கொடுத்து காலத்திற்கும் பேசப்படும் கதாநாயகன் ஆனார் சிவாஜி. அதுவே அவருக்கு வெற்றிகளையும் விருதுகளையும் அள்ளிக் குவித்தது.

1950களில் அறிஞர் அண்ணா எழுதிய "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகத்தில் மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி பாத்திரத்தில் அவர் நடித்ததை பார்த்து அசந்துபோன பெரியார் ஈ. வே. ரா அந்த மேடையிலேயே விழுப்புரம் சின்னையா மன்றாயர் ராஜாமணி தம்பதிகளின் புதல்வர்களில் ஒருவரான கணேசமூர்த்தி என்ற வி.சி கணேசனாக இருந்த அவருக்கு "சிவாஜி கணேசன்" என்றும் புகழ் நாமம் சூட்டி மரியாதை செய்தார். அன்று துவங்கிய தமிழ் சினிமா உலகில் மாபெரும் அத்தியாயம் "74வது வயதில் இதய நோய் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளால் நிறைவுற்றது".

நடிப்பு என்றால் சிவாஜி, சிவாஜி என்றால் நடிப்பு என்றாகி போய்விட்டது. சாமானியன் முதல் சரித்திர பாத்திரங்கள் வரை அவர் ஏற்காத வேடங்கள் இல்லை. கணேசனுக்கு ஒரு படத்திலேயே சிவாஜி என்று புகழாரம் சூட்டிய பெரியாராக வேடம் போட்டு நடித்து விட வேண்டும் என்பது லட்சியமாக இருந்தது. அவரது இந்த லட்சியம் - கனவு இறுதிவரை நிறைவேறாதது ஏமாற்றம் தான். ஆனாலும் அவர் ஏற்று நடித்த புராண இதிகாச வரலாற்று திரைப்படங்களை வேறு எவராலும் தொடமுடியவில்லை. அமரத்துவம் எய்தி 19 ஆண்டுகள் ஆனாலும், அவரைப் பற்றி பேசிக் கொள்கிறோம், எழுதி எழுதி மகிழ்கிறோம் உண்மையான கலைஞனுக்கு மரணம் இல்லை.

எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என பாடிய கவியரசு கண்ணதாசன் வரிகள் சிவாஜிக்கும் பொருந்தும்.

*- காட்சி விரியும் வீணை மைந்தன்*

# செப்டம்பருக்குள் இந்தியாவில் கரோனா பாதிப்பு 35 லட்சமாக அதிகரிக்க வாய்ப்பு; 2021ல் 6 கோடிக்குமேல் அதிகரிக்கலாம்: ஐஐஎஸ்சி எச்சரிக்கை

இந்தியாவில் கரோனா பாதிப்பு தற்போதுள்ள நிலவரத்தைவிட மோசமாகச் சென்றால் செப்டம்பர் மாதத்துக்குள் 35 லட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள். கர்நாடக மாநிலத்தில் 2.10 லட்சம் பேர் தொற்றுக்கு ஆளாவார்கள் என்று பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (ஐஐஎஸ்சி) நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.



அதுமட்டுமல்லாமல், நாட்டில் கரோனாவுக்குச் சிகிச்சை எடுத்து வருவோர் எண்ணிக்கை 10 லட்சமாகவும், கர்நாடகத்தில் மட்டும் 71,300 பேர் சிகிச்சையில் இருப்பார்கள் என்றும் ஐஐஎஸ்சி தெரிவித்துள்ளது.

ஐஐசிஎஸ் நிறுவனத்தின் பேராசிரியர்கள் ஜி.சசிகுமார், தீபக் ஆகியோரின் குழுவினர் தற்போது நாட்டில் மாநிலந்தோறும் கரோனா நோயாளிகள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்தும், எதிர்காலத்தில் பரிசோதனையை அதிகப்படுத்தினால் இருக்கும் நிலை குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். மாநில அரசுகள், மத்திய அரசின் நடவடிக்கைக்கு ஏற்ப கணிப்பு மாறுபடலாம் என்றும் தெரிவித்துள்ளனர். வாரத்துக்கு 2 அல்லது 3 நாட்கள் லாக்டவுன் கொண்டுவருதல், அந்த நாட்களில் முழுமையாக மக்களை வெளியேவரவிடாமல் தடுத்தல் மூலம் கரோனா சங்கிலியை உடைக்க முடியும் எனவும் பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய அளவில் உள்ள நிலவரம், மாநில அரசுகளின் கரோனா தடுப்பு நடவடிக்கை ஆகியவற்றை அளவீடுகளாக வைத்துக் கணிக்கப்பட்டுள்ளது. இதில் கேரளா, கர்நாடகா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நிலவரம் தேசிய நிலவரத்தைவிட சூழல் சிறப்பாக இருக்கிறது. ஆனால், மகாரஷ்டிரா, தமிழகம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தேசிய நிலவரத்தைவிட சூழல் மோசமாக இருக்கிறது.இந்தியாவில் இன்றைய நிலவரப்படி ஒட்டுமொத்தமாக கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 லட்சத்து 68 ஆயிரத்து 876 ஆக அதிகரித்துள்ளது. கரோனாவிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 6 லட்சத்து 12 ஆயிரத்து 814 ஆக உயர்ந்து, குணமடைந்தோர் சதவீதம் 63.23 ஆக உயர்ந்துள்ளது. கரோனாவில் 3 லட்சத்து 31 ஆயிரத்து 146 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாளையோ அல்லது நாளை மறுநாளோ இந்தியாவில் கரோனா பாதிப்பு 10 லட்சத்தை எட்டிவிடும்.இப்போது தொடரும் இந்த நிலையைவிட முன்னேற்றமான சூழல் இருந்தால், வரும் செப்டம்பர் மாதத்துக்குள் இந்தியாவில் 20 லட்சம் பேர் கரோனாவில் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. 4.5 லட்சம் பேர் சிகிச்சையில் இருப்பார்கள். 88 ஆயிரம் பேர் உயிரிழக்க வாய்ப்பு உள்ளது.அதேபோல கர்நாடகாவில் இப்போதுள்ள நிலையில் முன்னேற்றம் இருந்தால், செப்டம்பர் மாதத்துக்குள் 1.20 லட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள், 28,700 பேர் சிகிச்சையில் இருப்பார்கள்.

இதேநிலை 2021ம் ஆண்டு மார்ச் வரை தொடர்ந்தால் நாட்டில் 37.40 லட்சம் பேர் கரோனாவில் பாதிக்கப்படுவார்கள், அதில் 14 லட்சம் பேர் சிகிச்சையில் இருப்பார்கள். 1.90 லட்சம் பேர் கரோனா வைரஸால் உயிரிழக்கவும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது கரோனா பாதிப்பு இருக்கும் நிலையைவிட மோசமாக மாறினால், அதாவது நாளுக்குநாள் பாதிப்பு அதிகரிக்கும் பட்சத்தில், வரும் செப்டம்பர் மாதத்துக்குள் மகாராஷ்டிரவில் கரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 6.30 லட்சமாக அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. டெல்லியில் 2.40 லட்சமாகவும், தமிழகத்தில் 1.60 லட்சமாகவும், குஜராத்தில் 1.80 லட்சமாகவும் கரோனா நோயாளிகள் அதிகரிக்கலாம். உயிரிழப்பைப் பொறுத்தவரை செப்டம்பர் மாதத்துக்குள் 1.40 லட்சமாக அதிகரிக்கலாம்.

இதில் மகாராஷ்டிராவில் மட்டும் 25 ஆயிரம் பேர் கரோனாவால் உயிரிழக்க நேரிடும். டெல்லியில் 9,700 பேரும், கர்நாடகாவில் 8,500 பேரும், தமிழகத்தில் 6.300 பேரும், குஜராத்தில் 7,300 பேரும் உயிரிழக்க நேரிடலாம். இப்போதுள்ள நிலையைவிட மோசமான சூழல் தொடர்ந்தால் 2020ம் ஆண்டு நவம்பர் 1ம் தேதிக்குள் இந்தியாவில் 1.20 கோடி பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்படலாம், அதில் 5 லட்சம் பேர் உயிரிழக்க நேரிடும். 2021ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதிக்குள் கரோனா வைரஸால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை 2.90 கோடியாக அதிகரிக்கும், 10 லட்சம் பேர் உயிரிழக்க நேரிடும்.

நவம்பர் 1ம் தேதிக்குள் கர்நாடகாவில் கரோனா பாதிப்பு 7.20 லட்சமாக அதிகரிக்கும், 30,400 பேர் உயிரிழக்க நேரிடும். 2021ம் ஆண்டு ஜனவரிக்குள் 10.80 லட்சம் பேர் பாதிக்கப்படலாம், அதில் 78,900 பேர் உயிரிழக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளது.மோசமான சூழல் தொடர்ந்தால் 2021ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் கரோனாவில் 6.20 கோடி பேர் பாதிக்கப்பட வாய்ப்பு உண்டு. இதில் 82 லட்சம் பேர் சிகிச்சையில் இருப்பார்கள், 28 லட்சம் பேர் உயிரிழக்க நேரிடும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாத்தான்குளம் சம்பவம் முதல்வரை விசாரிக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்




தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் போலீசாரால் கடுமையாக தாக்கப்பட்ட தந்தை, மகன் உயிரிழந்த விவகாரம் நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இது தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு 10 போலீசார் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்நிலையில், சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் முதல்வர் எடப்பாடி பழனிசாமியையும் விசாரிக்க உத்தரவிடக்கோரி வழக்கறிஞர் ராஜாராமன், உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அதில், தந்தை மகன் கொலை வழக்கு தொடர்பான விசாரணை தொடங்கும் முன்னரே அவர்கள் உடல்நிலை கோளாறு காரணமாக உயிரிழந்ததாக முதலமைச்சர் முன்னுக்குபின் முரணாக பேசியதாக மனுதாரர் கூறியிருந்தார். மேலும், முதலமைச்சரின் பேச்சு குற்றவாளிகளை காப்பாற்றும் செயலாகக் கருதி கொலை வழக்கில் முதலமைச்சருக்கு தொடர்பு உள்ளதா? என்பதை விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கில் முதல்வரை விசாரிக்கும்படி உத்தரவிட முடியாது எனக் கூறிய நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்தனர்.

# கரோனா பாதிப்பில் சீனாவுக்கு அடுத்த இடத்தில் சென்னை; உலக அளவில் கனடாவைப் பின்னுக்குத் தள்ளி 20வது இடத்தில் டெல்லி

தமிழகத்தில் இன்று 4,549 பேருக்குக் கரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில், மொத்த பாதிப்பு எண்ணிக்கை 1,56,369 ஆக அதிகரித்துள்ளது. சென்னையில் 1,157 பேருக்குத் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னை தொற்று எண்ணிக்கை 82,128 ஆக அதிகரித்துள்ளது.4,549 என்கிற மொத்த தொற்று எண்ணிக்கையில் 25.4 சதவீதத் தொற்று சென்னையில் (1,157 ) உள்ளது. தமிழகத்தின் மொத்த எண்ணிக்கை 1,56,369ல் சென்னையில் மட்டும் 82,128 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது மொத்த தமிழக எண்ணிக்கையில் 52.5 சதவீதம் ஆகும். 1,07,416 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட நிலையில் மொத்த எண்ணிக்கையில் டிஸ்சார்ஜ் சதவீதம் 68.6 சதவீதமாக உள்ளது.நாளுக்கு நாள் தமிழ்நாட்டின் மொத்த எண்ணிக்கை, ஒவ்வொரு நாள் எண்ணிக்கையையும் முறியடித்து ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது. இந்திய அளவில் மகாராஷ்டிராவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழகம் இருந்து வருகிறது.தமிழகம் ஒரு லட்சத்தை 56 ஆயிரம் தொற்று எண்ணிக்கையைக் கடந்த நிலையில், இன்று சென்னையும் 82 ஆயிரத்தைக் கடந்துவிட்டது. புலம்பெயர் தொழிலாளர்கள், அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகம் திரும்புவோர் தொற்றுடன் வருகின்றனர். 3 லட்சத்து 78 ஆயிரம் பேர் இதுவரை திரும்பியுள்ளனர்.

இதில் 4,560 பேருக்கு நோய்த்தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.ஆனால், தமிழகத்தில் குறிப்பாக சென்னைக்குள் நெரிசல் காரணமாக தொற்று கணிசமாக அதிகரித்து வருகிறது. இது தமிழகத்துக்குப் பெரிய சவாலாக உள்ளது. பொதுமக்கள் தங்களைக் கட்டுப்பாடாக வைத்துக்கொள்வதே நோய்த்தொற்றிலிருந்து காக்கும்.இன்று மட்டும் வெளி மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்களில் 66



பேருக்குத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரசு அனுமதி அளித்தபின் அண்டை மாநிலம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து விமானம், ரயில், சாலை மார்க்கமாக வந்தவர்கள் இன்றைய தேதி வரை மொத்த எண்ணிக்கை 3,78,663.சென்னையின் தொற்று எண்ணிக்கையே தினமும் தமிழகத் தொற்று எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் உயிரிழப்பு 2,236 ஐக் கடந்துள்ளது. உயிரிழந்த 2,236 பேரில் சென்னையில் மட்டுமே 1,341 பேர் உயிரிழந்துள்ளனர். இன்று சென்னையில் மட்டும் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

மொத்த உயிரிழப்பில் சென்னையில் உயிரிழந்தவர்கள் மட்டும் 59.9 சதவீதமாகும். சென்னையின் மொத்த எண்ணிக்கையான 82,128ல் 1,341 பேர் உயிரிழந்திருப்பதன் மூலம் மரண விகிதம் சென்னையில் 1.6% ஆக உள்ளது. தமிழக மொத்த எண்ணிக்கையில் தமிழகத்தின் மரண விகிதம் 1.4% ஆக உள்ளது.சென்னையில் கரோனா தொற்றைக் கட்டுப்படுத்த தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. சென்னை மாநகராட்சி சார்பில் சென்னையில் குடிசைப் பகுதி, வருமானத்தில் பிற்பட்ட நிலையில் உள்ள பகுதி மக்கள் 28 லட்சம் மக்களைக் குறிவைத்து சமுதாய முன்னெடுப்புத் திட்டத்தை சென்னை மாநகராட்சி அமல்படுத்துகிறது.

மருத்துவ முகாம்கள் மூலம் நாளொன்றுக்கு 30,000 பேருக்குச் சோதனை செய்யப்படுவதாக ஆணையர் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.சென்னையில் ஜூன் 19ம் தேதி முதல் முழு ஊரடங்கு போடப்பட்டு பொதுமக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜூலை 6ம் தேதி முதல் ஊரடங்கில் தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. சென்னையில் வீடு வீடாகச் சோதனை நடத்தவும், பல்ஸ் ஆக்சிமீட்டர் மூலம் சோதனை நடத்தவும், 580 மருத்துவ மையங்களை மாநகராட்சி நடத்தி வருகிறது. இதன் மூலம் சென்னையில் கடந்த 10 நாட்களாக தொற்று எண்ணிக்கை 50 சதவீதம் வரை குறைந்துள்ளது.அகில இந்திய அளவில் தொற்று எண்ணிக்கை வேகமாக அனைத்து மாநிலங்களிலும் பரவி வருகிறது. சில மாநிலங்கள் மட்டுமே 25 ஆயிரத்தைக் கடந்த நிலையில் இன்று பல மாநிலங்கள் அந்தப் பட்டியலில் சேர்ந்துள்ளன. இதில் அகில உலக அளவில் மகாராஷ்டிரா முதல் பத்து இடத்தில் உள்ள மாநிலங்களின் பட்டியலில் இணைந்துள்ளது.மகாராஷ்டிரா 2.5 லட்சத்தைக் கடந்துவிட்டது. அங்கு 2,75,640 பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக அளவில் 9ம் இடத்திலிருந்த மெக்சிகோவை பின்னுக்குத் தள்ளி 9ம் இடத்தில் மகாராஷ்டிரா உள்ளது. அடுத்த இடத்தில் உள்ள தமிழகம் உலக அளவில் கொலம்பியாவைப் பின்னுக்குத் தள்ளி பிரான்ஸுக்கு நெருக்கமாக கீழே 19வது இடத்தில் உள்ளது. இன்றைய எண்ணிக்கை 1,56,369 என்கிற எண்ணிக்கையுடன் இந்திய அளவில் இரண்டாம் இடத்தில் தமிழகம் உள்ளது.அதற்கு அடுத்த இடத்தில் டெல்லி 1,16,993 என்கிற எண்ணிக்கையுடன் உலக அளவில் கனடாவைப் பின்னுக்குத் தள்ளி 20வது இடத்தில் உள்ளது.

# அன்பின் தொனி - 569

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்**

கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்திலே என்னைத் தண்டி யாதேயும். என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன், என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது. என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது, கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர். திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும், உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும். மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்? என் பெருமூச்சினால் இளைத்துப்போனேன், இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன். துயரத்தினால் என் கண்கள் குழி விழுந்துபோயிற்று, என் சத்துருக்கள் அனைவர்நிமித்தமும் மங்கிப்போயிற்று. அக்கிரமக்காரரே, நீங்கள் எல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள், கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார். கர்த்தர் என் விண்ணப் பத்தைக் கேட்டார், கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார். என் பகைஞர் எல்லாரும் வெட்கி மிகவும் கலங்கிப் போவார்கள், அவர்கள் பின்னாகத் திரும்பிச் சடிதியிலே வெட்கப்படுவார்கள். - **சங்கீதம் 6: 1-10**

**கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ் செய்வார்**

என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும். சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவைப் பிடித்துக்கொண்டுபோய், விடுவிக்கிறவன் இல்லாமையால், அதைப்பீறாதபடிக்கு என்னைத் தப்புவியும். என் தேவனாகிய கர்த்தாவே, நான் இதைச் செய்ததும், என் கைகளில் நியாயக்கேடிருக்கிறதும், என்னோடே சமாதானமாயிருந்தவனுக்கு நான் தீமைசெய்ததும், காரணமில்லாமல் எனக்குச் சத்துருவானவனை நான் கொள்ளையிட்டதும் உண்டானால், பகைஞன் என் ஆத்துமாவைத் தொடர்ந்துபிடித்து, என் பிராணனைத் தரையிலே தள்ளி மிதித்து, என் மகிமையைத் தூளிலே தாழ்த்தக்கடவன். கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்தில் எழுந்திருந்து, என் சத்துருக்களுடைய மூர்க்கங்களினிமித்தம் உம்மை உயர்த்தி, எனக்காக விழித்துக் கொள்ளும், நியாயத்தீர்ப்பை நியமித்திருக்கிறீரே. ஜனக்கூட்டம் உம்மைச் சூழ்ந்துகொள்ளும், அவர்களுக்காகத் திரும் பவும் உன்னதத்திற்கு எழுந்தருளும். கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ் செய்வார், கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும். துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும், நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக, நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித் தறிகிறவர். செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது தேவன் நீதியுள்ள நியாயாதிபதி, அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார், அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக் கிறார். அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம்பண்ணினார், தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார். இதோ, அவன் அக்கிரமத்தைப்பெறக் கர்ப்பவேதனைப்படுகிறான், தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான். குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான், தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பும், அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும். நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். - **சங்கீதம் 7: 1-17**

**ஆண்டவராகிய கர்த்தாவே உம்முடைய நாமம் பூமியெங்கும் மேன்மையுள்ளதாயிருக்கிறது!**

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர். பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர். உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனு'னை நீர் நினைக்கிறதற்கும், மனு'குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர், மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்மு டைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப் படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங் களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! - **சங்கீதம் 8: 1-9**

**சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்**

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன், உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன். உம்மில் மகிழ்ந்து களிகூருவேன், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன். என் சத்துருக்கள் பின்னாகத் திரும்பும்போது, உமது சமுகத்தில் அவர்கள் இடறுண்டு அழிந்துபோவார்கள். நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து, நீதியுள்ள நியாயாதிபதியாய் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறீர். ஜாதிகளைக் கடிந்துகொண்டு, துன்மார்க்கரை அழித்து, அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி குலைத்துப்போட்டீர். சத்துருக்கள் என் றென்றைக்கும்பாழாக்கப்பட்டார்கள், அவர்கள் பட்டணங்களை நிர்மூலமாக்கினீர், அவர்கள் பேரும் அவர்களோடேகூட ஒழிந்துபோயிற்று. கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார், தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார். அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார். சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர், நெருக்கப்படுகிறகாலங்களில் அவரே தஞ்சமானவர். கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை, ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப் பார்கள்.
- **சங்கீதம் 9: 1-10**

*தொடரும்...*

# 23ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். விநாயகமூர்த்தி ஆனந்தராஜா

### (நவக்கிரி, புத்தூர்)



இருபத்திமூன்று ஆண்டுகள் முன்னர் இதே நாளில்
இலட்சிய கனவுகளோடு கானகத்தில் தலைவன் வழியில்
உலாவிய உன் உயிர் மண்ணுக்கு வித்தானது
இதயத்தில் விடுதலை வேட்கையை சுமந்த வண்ணம்
பொருத வரும் எதிரிகளை விரட்டியடிக்க விரைந்தாய்
போரில் உன் நெஞ்சைத் துளைத்த சிங்களச் சன்னம்
ஒரு வரலாற்றை எழுதிச் செல்ல வாடினோம்
உன் உறவுகள்...
சுதந்திரத் தாகத்தோடு சென்று
உதிரம் தமிழ் மண்ணை நனைக்க
வீர மரணத்தை விடுதலைக்கு இட்ட வித்தாகவே கனித்தோம்
வாடிய எம் கண்களில் நீர் நிறைந்து வடியவில்லை
தூரத்தில் மிகத் தொலைவில் உன்னை நாம் இழந்தோம்
தோழர்கள் உடனிருந்து உன்னை விதைத்தனர் அன்று
எங்கோ மண்ணில் வாழ்பவர் நீ ஒருநாள் இல்லம் வரவேண்டும்
எம் பொக்கிசமாய் உன்னை நாம் பூசித்து வாழ்வோம்...

**தோற்றம்** 29-12-1972

**மறைவு** 19-07-1997

**ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்**

**416-888-1128, 416-494-8951**

# Carefirst Family Health Team
## Accepting New Patients




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# ஸ்ரீ காளிகாம்பா துர்க்காமாதா தேவி ஜோதிடம்



இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக ஜோதிடக் கலை வல்லுனர் வழிவந்த பிரபல ஜோதிடர் பண்டித் மூர்த்தி

**SRI KALI KHAMBA DURGA MATHA DEVI**
INDIAN ASTROLOGER, PSHYCHIC & SPIRITUALIST
Expert In Horoscope, Palmistry, Face Reading World Famous Indian Astrologer &Pshychic Reader passed away from generation to generation




**If You Are Having Problems? He Has A Solution!!**

ARE YOU DISAPPOINTED MEETING ASTROLOGERS NOT GETTING SOLUTIONS?
Then Once Meet Our World Famous Indian Astrologer Shivananda BabaJi To Get Permanent Solution To All Your Problems Either Personal Life Or Professional Life In Just Few Days With Best Results.




**Best Solution For Your Best Future**
**SPECIALIST IN BRINGING BACK LOVED ONES**
**TAKE RIGHT DECISION AT RIGHT TIME**

★ Money Blessings
★ Love Problems
★ Health Problems
★ Relationship Problems
★ Husband & Wife Disputes
★ Family Arguments
★ Depression
★ Sexual Problems
★ Business Problems
★ People's Jealousy
★ Enemy Problems
★ House Protection
★ Divorce
★ Court Cases
★ Land Property Issues
★ Childless Couples
★ Drinking Problems
★ Marriage Problem
★ Education
★ Job/Work Problems
★ Drug Addictions
★ Intimacy Problems
★ Children's Problems
★ Negative Energy
★ Worries about Loved Ones ★

IF YOU ARE NOT SATISFIED WITH OTHER ASTROLOGERS THEN COME TO US AND GET ALL YOUR PROBLEMS SOLVED. 100% GUARANTEED!

OPEN 7 DAYS | 100% RESULT GUARANTEED GIVE LIFE LONG PROTECTION | 10AM TO 8PM
ALL RELIGIONS WELCOME | ALL READING ARE PRIVATE & CONFIDENTIAL | WALK-INS WELCOME
CALL AND BOOK AN APPOINTMENT

கைரேகை
கல்வி, உத்தியோகம்
இலட்சுமி வசீகரம்
பணப் பிரச்சனை
உடல்நலப் பிரச்சனை
வெளிநாட்டுப் பயணங்கள்
எதிரிகள் தொல்லை
சொத்து பிரச்சனைகள்
திருமணயோகம்
சர்ப்ப தோஷம்
பாலியல் பிரச்சனைகள்
நாம சட்சத்திரம்
தொழில், வியாபாரம்
வதிவிடப்பிரச்சனைகள்
காதல் பிரச்சனை
மனச்சோர்வு
குடும்ப பிரச்சனைகள்
விவாகரத்து
நீதிமன்ற வழக்குகள்
குழந்தைப் பாக்கியம்
கர்ப்பதோஷம்
மது போதை பழக்கம்
பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்

கஸ்ட - நஸ்டங்கள் மற்றும் உங்கள் அன்பானவர்களைப் பற்றிய கவலையா என்னிடம் வாருங்கள் உங்கள் அனைத்து பிரச்சனைகளையும் 100% தீர்த்து வைக்கின்றேன்.

# PANDITH: MURTHY
# 647 - 390 - 7388

**67A Dundas St West, Mississauga, ON, L5B 1H7**
(Royal Jewellery Upstairs - Dundas St W & Confederation Pkwy Intersection)

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA 1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1267 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 17, 2020

# கனடாவின் சிறு கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைச்சர் Mary Ng, மார்க்கம் நகரில் PCL Graphics நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்







*(முன் பக்கத் தொடர்ச்சி)*

ஆனால், நோயின் தாக்கத்திற்கு பின்னர் அச்சுத்தொழில் சார்ந்த வர்த்தகம் குறைந்து பாரிய நஸ்டம் ஏற்பட்ட நிலையில் கனடா அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, தமது தொழிற்சாலையின் உள்ளே இயந்திரங்கள் மற்றும் அனைத்து தொழில்நுட்பப் பிரிவுகளையும் Personal Protective Equipment (PPE) எனப்படும் தனிப்பட்ட பாதுகாப்புக்குத் தேவயான உபகரங்களையும் பொருட்களையும் தயாரிக்கும் தொழில் மாற்றங்களைச் செய்து கனடாவில் அனைத்து மாகாணங்களுக்கும் மிக அவசியமான உபகரங்களை உற்பத்தியை ஆரம்பித்தது.

இவ்வாறான இந்த தொழிற்சாலைக்கு கனடிய அரசின் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காவும், நிறுவனத்திற்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்காகவும் அமைச்சர் இன்று அங்கு விஜயம் செய்தார்.

ஊடக நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட விசேட அழைப்பின் பேரில் கனடா உதயன் பிரதம ஆசிரியர் மற்றும் "நண்பன்- உலகளவில்" இணையத்தளத்தின் கனடிய இயக்குனர் மரியராஜா ஆகியோர் அங்கு சென்றிருந்தனர். அமைச்சர் அங்கு வருகை தந்தவுடன் முதலில் தொழிற்சாலையில் உற்பத்திப் பிரிவை ஊடகவியலாளர்கள் சகிதம் நிறுவனத்தின் அதிபர் உடனிருக்க பார்வையிட்டு விளக்கங்களை பெற்றுக்கொண்டார்.

பின்னர் அமைச்சர் தனது உரையில்

"மிகவும் கஸ்டங்களையும் சவால்களையும் எமக்குத் தந்த கோவிட்-19 ஆரம்ப நாட்களில் எமது அரசாங்கத்திற்கும் கனடிய மக்களுக்கும் தமது ஆதரவைத் தந்த சகல உற்பத்தியாளர்களுக்கும் தேசிய மற்றும் பல்லின ஊடகங்களுக்கும் முதலில் நன்றி தெரிவித்த பின்னர், PCL Graphics போன்ற கனடிய நிறுவனங்கள் எமக்கு மிகவும் உறுதுணையாக இருந்துள்ளதாகக் குறிப்பிட்டு, இந்த PCL Graphics நிறுவனத்தைப் போன்று கனடாவின் சகல மாகாணங்களிலும் சுமார் 700 க்கும் மேற்பட்ட கனடிய நிறுவனங்கள் தாமாக முன்வந்து தமது முன்னைய உற்பத்திகளை நிறுத்தி விட்டு தற்போது எமது காலத்தின் தேவையாக இருக்கும், Personal Protective Equipment (PPE) எனப்படும் தனிப்பட்ட பாதுகாப்புக்குத் தேவையான உபகரங்களையும் பொருட்களையும் தயாரிக்கும் தொழில் மாற்றங்களைச் செய்து கனடாவின் பொருளாதாரத்திற்கும் மக்களின் அவசியமாக தேவைகள் மற்றும் வைத்தியசாலைகளின் தேவைகள் ஆகிவற்றை நிறைவு செய்வதாகக் குறிப்பிட்டார். மேற்படி தொழிற்சாலையில் இரண்டு தமிழ் பேசும் அன்பர்கள் முகாமைத்துவப் பதவிகளில் உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா உதயன் பிரதம ஆசிரியர் அங்கிருந்து விடைபெறும் போது, ஏனைய துறை சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கியது போன்று கனடாவில் இயங்கிவரும் பல்லின ஊடகங்களுக்கும் கனடிய அரசு வழங்கி வருகின்ற ஆதரவிற்கும் நன்றி தெரிவித்தார்.

*--கனடா உதயன் செய்திப்பிரிவு*

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தின் கொடியேற்ற வைபவம் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது



ஸ்காபுறோ நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தின் இவ்வருடத்தின் மகோற்சவப் பெருவிழாவின் கொடியேற்ற வைபவம் கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மதியத்திற்கு முன்னராக பக்திப் பெருவிழாவாக நடைபெற்றது.

தற்போதைய "கோவிட்-19" தொடர்பான அரச மற்றும் நகரசபை என்பனவற்றின் கட்டுப்பாடுகள் நிறைந்த அறிவிப்புக்களையும் நிபந்தனைகளையும் ஆலயத்தின் அனைத்து சிவாச்சாரியப் பெருமக்களும் பணியாளர்களும், தொண்டர்களும், பக்தர்களும் விழா உபயகாரர்களும் சிறந்த முறையில் கடைப்பிடித்த வண்ணம் கொடியேற்ற வைபவம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வருடத்திற்குரிய திருவிழாக்களின் உபயகாரர்கள், அவர் தம் குடும்பத்தினர் மற்றும் அடியார்கள் என நூற்றுக்கு சற்று குறைவானவர்கள் ஆலய மண்டபத்தில் கூடி நின்று வரசித்தி விநாயகனை வேண்டியவண்ணம் பக்திப் பரவசத்துடன் வணங்கி நிற்க கொடியேற்ற வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

தேவஸ்த்தானத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்களின் தலைமை-யில் அனைத்து சிவாச்சாரியப் பெருமக்களும் தங்கள் பணிகளைச் சிறப்பாக ஆற்றினர். தொற்று நோய் தொடர்பான அச்சம் சூழ்ந்த இன்றைய நாட்களில் வரசித்தி விநாயகரின் கொடியேற்றம் நடைபெற்று தற்போது தொடர்ச்சியாக காலையும் மாலையும் தவறாது, உபயகாரர்களின் ஆதரவோடு திருவிழாக்கள் இடம்பெற்று'வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் புகழ்பெற்ற பெண் எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் காலமானார்

இலங்கையின் மூத்த பெண் எழுத்தாளரான திருமதி பத்மா சோமகாந்தன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் காலமானார். யாழ். வண்ணார்பண்ணையில் பிறந்த பத்மா சோமகாந்தன் தனது 17 வயதில் எழுதத் தொடங்கியவர்.



கொழும்பில் வாழ்ந்து வந்த அவர் தனது இறுதிக் காலம் வரை சுறுசுறுப்பான படைப்பாளியாக இலக்கியப் பணி புரிந்து வந்துள்ளார். 2004ம் ஆண்டு திரு நா. சோமகாந்தன்- பத்மா சோமகாந்தன் என்னும் இலக்கியத் தம்பதியை கனடா உதயன் நிறுவனம் இங்கு அழைத்து அவர்களுக்கு பலசுவைக் கலைவிழா மேடையில் சிறப்புக் கௌரவம் வழங்கியது.

எழுத்தாளராக, பேச்சாளராக, இலக்கியவாதியாக அவர் தமிழ் கூறும் உலகெங்கும் புகழுடன் வாழ்ந்தவராவார். அன்னாரின் மறைவு குறித்து முக்கியஸ்தர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களின் பூதவுடல் இன்று 17ம் திகதி காலை 9.00 மணி முதல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 19ந்திகதி ஞாயிறு காலை 10 மணி முதல் 12 மணி வரை இறுதிக் கிரிகைகள் நடைபெற்ற பின் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

துயர் பகிர்ந்து கொள்ள அழைக்க வேண்டிய இலக்கங்கள்:-

கண்ணன் - மகன் (கனடா) 1-905-861-9007
ஜேய்- மகன் (கனடா) 1-289-981-9890
கலா- மகள் (இலங்கை) 94779847946
ராஜன் - மகன் (கனடா) 1-647-524-2341

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074